[illegible].

ലക്കം 6    പുസ്തകം 6
1933 [illegible]

JL
M2H, Q427SN
N33.6.6
186923

1057


1057

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ழுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 FEB 1934
MADRAS

OFFICE OF THE REGISTRAR
16 FEB 1934
MADRAS

# சிவநேசன்

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு சு. § ஆங்கீரச-தை 1933-ஜனவரி § திங்கள் சு.

உள்ளுறை. பக்கம்.


| | | |
|---|---|---|
| க. | திருவாதிரைத் திருநாட்சிறப்பு. | 201 |
| உ. | மகாராஜா துறவின்மாட்சி. | 203 |
| ௩. | குருவாயூர் தர்மகர்த்தர் ஜாமொரின் அவர்கட்கு விக்ஞாபனம். | 205 |
| ச. | இராஜப் பிரதிநிதி அவர்களுக்கு விண்ணப்பம். | 206 |
| ரு. | பருவத்தே பயிர்செய் ...... | 209 |
| சு. | காந்தியும் சமயமும். | 213 |
| எ. | திருவண்ணுமலை ஞானதீபக்குடை மகோற்சவம். | 222 |
| அ. | சிவபெருமானே வழிபாட்டுக்குத் தக்க பலனைக் கொடுப்பர். | 224 |
| கூ. | ஆலயப்பிரவேசம் அவசியமா? | 226 |
| ௰. | வைத்தியத் துறை. | 228 |
| கக. | திருநீறணிவதேன்? | 229 |
| கஉ. | பண்டைத் தமிழ்நாடு. | 234 |
| க௩. | பொங்கற் பொன்னுள். | 238 |
| கச. | சிவநேசனுக்கு வாழ்த்தும் மதிப்புரையும். | 240 |
| கரு. | சங்கரலிங்கஉலா ... | |


ஆசிரியர் ராம. து. ராம. இராமசாமி செட்டியார்,

பலவான்குடி.

சென்னைப் பதிவு எண் 2302.

# செய்தித் திரட்டு.

உள்ளூர்:—குமாரவிநாயகர் திருக்கோயில், நகரச்சிவாலயம், செங்கமல நாயகி திருக்கோயில் ஆதியவைகளில் திருப்பள்ளியெழுச்சிவிழா நியமமாக நடைபெற்றது.

சிவாலயத்திலும் குமாரவிநாயகர் திருக்கோயிலிலும் திருவாதிரைத் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. மார்கழி உ௮ல அன்பர்கள் தெரிசனமும் திருவுலாவும் கண்டு இன்புற்றனர். பொங்கற் புதுநாளிற் பிள்ளையார் கோவில்கள், சிவாலயங்கள் முதலானதேவாலயங்களிலும், வீடுகளிலும் பாற்பொங்கலிட்டுப் படைத்துத் தெய்வம் பராவி மக்களனைவரும் மகிழ்வுற்றனர்.

இம்மதி உ௮ல பூசத்திருநாளில் குன்றக்குடியிலிருந்தும், திருவேலன் குடியிலிருந்தும் முருகக்கடவுள் மதுநதிக்கு எழுந்தருளுவர். தீர்த்தவாரிமகத்துவமும், அன்றிரவு பழுதியாயி யூருணியில் மண்டபப்படியும் தெப்போற்சவமும் விமரிசையாக நடைபெறும்.

இளங்குமரன்:—சென்னையில், திருநெல்வேலி ஜில்லாப் போக்கிரி, இராமநாதபுரம் ஜில்லாப் போக்கிரிகள் கையிற் சிக்கியுளான் எனத் தெரிகிறது.

ஆத்தங்குடி:—மறைத்திருவாளர் முத்துச்சாமி ஐயங்காரவர்களைத் தலைவராகவும், திருவாளர் சு. வீர. கதிரேசச் செட்டியாரவர்களை உப தலைவராகவும் கொண்டு ஸநாதன தர்ம மகாசபை தொடங்கப்பெற்றுளது. மார்கழி ௩, உ௩ தேதிகளில் ஆத்தங்குடியிலும், உ௪ ல குன்றக்குடியிலும், உகூல காரைக்குடியிலும் கூடியது. காந்தி கலக (தீண்டாதார் ஆலயப் பிரவேச)த்தைத் தடுப்பதற்கு உரிய நெறிகள் பல அறிஞர்களால் விரித்துரைக்கப்பெற்றன. மறைத்திருவாளர்களான:—குன்றக்குடி அ. க. சுப்பிரமணிய தீக்ஷிதர், தேவகோட்டை S. சுப்பிரமணியஐயர் அட்வகேட் முதலானோர் தலைமை வகித்தனர். மதுரை தமிழ்நாட்டு ஆகம சபைக்காரிய தரிசி ஆர். கணபதி ஐயர் அட்வகேட், தேவகோட்டை வக்கீல் நாகநாத சாஸ்திரியார், சுப்பிரமணியகனபாடிகள், இராமபத்திராச்சாரியார், சக்கரவர்த்தி ஐயங்கார் ஆதிய மறைத்திருவாளர்களும், சு. வீர. கதிரேசச்செட்டியார், சிவநேசன் இராமசாமி செட்டியார் முதலான சைவத் திருவாளர்களும் பிரசங்கித்தனர்.

இந்துமத்திய காரியசபை:—இது, 24—12—1932 ல், சென்னை—பார்க்டவுன்—20, தங்கசாலைத் தெருவில். திருவாளர்களான.—ஸேத் புருஷோத்தமதாஸ்—கோகுலதாஸ் முதலான பல பிரமுகர்களால், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகளின் அநுக்கிரகத்துடன் தொடங்கப்பெற்றுளது. தெய்வத் தன்மைவாய்ந்த தத்துவங்களையாதாரமாகக் கொண்ட நம் மதாநுஷ்டானங்களைக் காப்பாற்றவும், புராதன நூல்களின் விதி முறைகளை அநுசரிக்கவும் எழுந்த இச்சபை, உரிய முறையில் பெரியதொண்டாற்றுகின்றது. இச் சபையார் வெளியிட்டுள்ள அறிக்கைகளுட் சில அடுத்த திங்கட் சிவநேசனில் வரக்காணலாம்.

OFFICE OF THE R...
16 FEB 193[illegible]
MADRAS

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு சு } பலவான்குடி-ஆங்கீரச—தை { திங்கள் சு.

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## திருவாதிரைத் திருநாட் சிறப்பு.

### அப்பர் சுவாமிகளருளிய திருவாரூர்த் திருப்பதிகம்.

பண்—குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

முத்துவிதான மணிப்பொற்கவரி முறையாலே
பத்தர்களோடு பாவையர்சூழப் பலிப்பின்னே
வித்தகக்கோல வெண்டலைமாலை விரதிகள்
அத்தனாரூ ராதிரைநாளா லதுவண்ணம். (க)

நணியார்சேயார் நல்லார்தீயார் நாடோறும்
பிணிதான்றீரு மென்றுபிறங்கிக் கிடப்பாரும்
மணியேபொன்னே மைந்தாமணாளா வென்பார்கட்
கணியாரூ ராதிரைநாளா லதுவண்ணம். (உ)

வீதிகடோறும் வெண்கொடியோடு விதானங்கள்
சோதிகள்விட்டுச் சுடர்மாமணிக ளொளிதோன்றச்
சாதிகளாய பவளமுமுத்துத் தாமங்கள்
ஆதியாரூ ராதிரைநாளா லதுவண்ணம். (ங)

குணங்கள்பேசிக் கூடிப்பாடித் தொண்டர்கள்
பிணங்கித்தம்மிற் பித்தரைப்போலப் பிதற்றுவார்

வணங்கிநின்று வானவர்வந்து வைகலும்
அணங்கனாரு ராதிரைநாளா லதுவண்ணம். (௪)

நிலவெண்சங்கும் பறையுமார்ப்ப நிற்கில்லாப்
பலருமிட்ட கல்லவடங்கள் பரந்தெங்கும்
கலவமஞ்ஞை காரென்றெண்ணிக் களித்துவந்
தலமராரு ராதிரைநாளா லதுவண்ணம். (௫)

விம்மாவெருவா விழியாத்தெழியா வெருட்டுவார்
தம்மாண்பிலராய்த் தரியார்தலையான் முட்டுவார்
எம்மானீச னெந்தையெனப்ப னென்பார்கட்
கம்மானாரு ராதிரைநாளா லதுவண்ணம். (௬)

செந்துவர்வாயார் செல்வனசேவடி சிந்திப்பார்
மைந்தர்களோடு மங்கையர்கூடி மயங்குவார்
இந்திரனாதி வானவர்சித்த ரெடுத்தேத்தும்
அந்திரனாரு ராதிரைநாளா லதுவண்ணம். (௭)

முடிகள்வணங்கி மூவாதார்கண் முன்செல்ல
அடிகொள்வேய்த்தோள் வானரமங்கையர் பின்செல்லப்
பொடிகள்பூசிப் பாடுந்தொண்டர் புடைசூழ
அடிகளாரு ராதிரைநாளா லதுவண்ணம். (௮)

துன்பநம்மைத் தொழாதநாள்க ளென்பாரும்
இன்பநம்மை யேத்துநாள்க ளென்பாரும்
நும்பினெம்மை நுழையப்பணியே யென்பாரும்
அன்பனாரு ராதிரைநாளா லதுவண்ணம். (௯)

பாரூர்பௌவத் தானைப்பத்தர் பணிந்தேத்தச்
சீரூர்பாட லாடலறாத செம்மாப்பார்ந்
தோரூரொழியா துலகமெங்கு மெடுத்தேத்தும்
ஆரூரன்ற னாதிரைநாளா லதுவண்ணம். (௰)

திருச்சிற்றம்பலம்.

பதிகவரலாறு:—பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோனாகிய திருஞானசம்பந்தர், ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்த பிரானாகிய அப்பரைநோக்கித் தேவரீர் வருநாளில் திருவாரூர் நிகழ் பெருமை வகுத்துரைப்பீர் என்று கேட்டருள, சிவநாமம் பயிலுஞ் செந்நாவரான வாகீசர், திருவாரூர்த் திருவாதிரைச் சிறப்பை யெல்லாம் பிள்ளையார்க்குச் சொல்லியரு[illegible]ப்பபுராணங் கூறும் திருப்பாசுரங்கள்,

10L923



திருநாவுக் கரசரெதிர் சென்றிறைஞ்சச் சிரபுரத்துத் தெய்வ வாய்மைப்
பெருஞான சம்பந்தப் பிள்ளையா ரெதிர்வணங்கி யப்ப ரேநீர்
வருநாளிற் றிருவாரூர் நிகழ்பெருமை வகுத்துரைப்பீ ரென்று கூற
வருநாமத் தஞ்செழுத்தும் பயில்வாய்மை யவருமெதி ரருளிச் செய்வார்;

சித்த நிலாவுந் தென்திரு வாரூர் நகரானை
மைத்தழை கண்ட ராதிரை நாளின் மகிழ்செல்வ
மித்தகை மைத்தென் றென்மொழி கேனென் றுரைசெய்தார்
முத்து விதான மணிப்பொற் கவரி மொழிமாலை.

அம்மொழி மாலைச் செந்தமிழ் கேளா வணிசண்பை
மைம்மலர் கண்டத் தண்டர்பி ரானூர் மகனாருங்
கொய்ம்மலர் வாவித் தென்திரு வாரூர் கும்பிட்டே
யும்முடன் வந்திங் குடனமர் வேனென் றுரைசெய்தார்.

திருச்சிற்றம்பலம்.

---

# மகாராஜா துறவின் மாட்சி.

உலகிற் பிறந்த மக்கள் பலரும் இகபோக வாழ்க்கையையே பெரிதும் விரும்புவதன்றி, அதனைத் துறத்தல் அரிதினும் அரிதே. இகசம்பத்தை மிகுதியாகப் பெற்றுள்ளவர்கள் துறத்தல் என்பது மிகவும் அரிதே. இந் நிலையுடைய இந் நிலவுலகில் அரச வாழ்க்கையையும், அதனினும் சிறந்த குபேர வாழ்க்கையையும் பெற்றிருந்த பத்திரகிரியார், பட்டினத்தார் ஆகிய மகான்கள் துறவுபூண்டமையை நமது தாயுமானப் பெருந்தகையார்,

ஓட்டுடன்பற் றின்றி யுலகைத் துறந்தசெல்வப்
பட்டினத்தார் பத்ரகிரி பண்புணர்வ தெந்நாளோ.

எனப் பாராட்டி அருளியவா றுணர்ந் தாய்யும் ஆற்றலைப் பெறுதல் தவமுடையார்க்கே சாலும்.

இன்ன தன்மையை இனிதுணர்ந்து, இந் நன்னிலை கைவரப் பெற்ற ஒரு பெருந் திருவாளரின் சிறந்த செயலை இனிது விளக்குதல் இன்பத்துக் கேதுவாம்.

தேவகோட்டைத் திருவாளர் அள. அரு. இராமசாமி செட்டியார் அவர்களின் அருந்தவப் புதல்வர் நால்வர்களுள் முதன்மை யானவரும், தனவணிக நாட்டின் தலைநகராகிய தேவகோட்டை ஜமீந்தாரும், குமார் ஜமீந்தார் - பெருந்திருவாளர் காளைராஜா ஆகியவர்களின் அருள்பெற்ற நங்கையாரும் ஆகிய மகான் அருணாசல

சுவாமிகள், பிறவிப் பெருஞ் செல்வராய், உப்பூர், திருவிராமேச்சுரம் திருக்கானப்பேரூர், திருப்பாண்டிக்கொடுமுடி, திருவைகன்மாடக் கோயில் ஆதிய சிவதலங்களின் திருக்கோயில்களும், திருக் குளங் களும், திருநந்தனவனங்களும், வகைவகையான திருமடங்களும் திருப்பணி புரிந்து திருவிழாவாதிய சிறப்புற நடாத்தியும், காசி முதலான மகா க்ஷேத்திர யாத்திரைகளை விதிமுறை வழாது செய்தும், சேதுயாத்திரையைப் பண்டையமுறைதிறம்பாது கிரமமாகத் தமது நட்பு உறவினர்களுடன் காலால் நடந்து தீர்த்தாடனங்களும் தெரிசனங்களும் செய்துவந்தும், விநாயக சஷ்டி, பிரதோடமாதிய விரதங்களை விதிமுறை நோற்றும் அன்பர் அடியவர்களின் கூட்டுறவை மேற்கொண்டு நாடோறும் ஞானவுணர்ச்சி மேலெழுந்தோங்க, குடும்பவாழ்க்கையில் யாதொரு குறைபாடுமின்றிச் சகோதரர்கள் தமது குறிப்பின்வழிக் காரியங்களை நிர்வகித்து நன்குற்ற, தமது சந்ததியார்களும் தம் மினத்தவர்களும், தமது திருவாக்குக்கு எதிர்வாக்கின்றி நடக்க, தம் முன்னர்ப் பலபேர்களும் தங்களுக்குள்ள வழக்குகளை முறையிட அவைகளையெல்லாம் இருபக்கத்தாரும் ஏற்குமாறு நியாயம் வழங்கிச் சமாதானம் நிலவச் செய்தும், தாம் பிறந்த மரபிற்குரிய மாற்றூர்க் கோயிற் திருப்பணியாதிய செவ்வே நடைபெறவேண்டிய முயற்சிகளுடன் திருவிழாவும் ஆரம்பித்து நடத்தியுமுள்ள நிலைமையில், கல்விகேள்விகளில் நாட்டமுடையராய், சமய ஞானம், சங்கீதஞானம், அத்துவித ஞானம் முதிர்ந்து நித்திய வாழ்வுக் கேதுவாகிய துறவுமார்க்கம் பூண்டு, தம்மால் முன்னரே ஸ்தாபிக்கப்பெற்ற திருமடங்களுள் ஒன்றாகிய காளையார்கோவில் வேதாந்த மடாலயத்தில் எழுந்தருளியிருந்து, இவ்வாண்டு மார்கழித் திங்கள் உகூ சோமவாரம் மிருகசிரிட நன்னாளில் விதேகமுத்தியடைந்தனர்.

கோவிலூர் ஆண்டவர் பரம்பரை உயர்திரு வீரசேகர ஞான தேசிக சுவாமிகள் சிவதிருப்பணிகளைச் செவ்விதினாற்றிச் சிவத்திற் கலந்து இன்பந் திளைக்கின்றவாறே, சிவதிருப்பணிகள் பல புரிந்த ஜமீந்தார் சுவாமிகளும், ஸ்ரீ சொர்ணவல்லி சமேத சொர்ணகாளீஸ்வரர் திருவருள் வயத்தராய் நிரதிசயானந்தப் பெருவாழ்வுபெற்றுத் தம்மைப் போற்றுபவர்கட்கு அநுக்கிரக மூர்த்தியாய் விளங்குவர்.

வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலையுற்ற வித்தகப் பெரியாராகிய இம் மகானின் துறவு, மகாராஜா துறவின் மாட்சியே யாகும்.

மண்ணினும் தலத்தினும் மனைக்கு வாய்த்தநற், பெண்ணினும் மகவினும் பெரிய பேரினும், துண்ணென விழைவினைத் துறந்த தூயரே, விண்ணினு மின்புடன் விளங்கி மேவுவார். (சிவதருமோத்தரம்)

---

உ

## குருவாயூர் தர்மகர்த்தர் ஜாமொரின் அவர்கட்கு விக்ஞாபனம்.

ஸ்ரீ கண்ட பரமசிவன் உமை அம்மையாருடன் வீற்றிருந்தருளும் கைலாசகிரியைத் தன்னகத்தே கொண்ட மகாமேருமலையின் கொடுமுடிகளுள் ஒன்றாய் விளங்குவதும், தக்ஷிணகைலாசம் என்னும் பெருமையை உடையதும், ஸ்ரீராமபிரானுடைய பாததூளியைக்கொண்டதும், உண்மை நாயன்மார்களால் தோத்திரம் செய்யப்பெற்ற சிவாலயங்களும் குகாலயங்களும் சிறந்துவிளங்குவதும் ஆகிய இலங்கையின் வடபாலுள்ள யாழ்ப்பாணம் என்னும் நன்னாட்டினைச் செங்கோல்செலுத்தி அரசியல்புரிந்த தமிழரசர்கள் அவ்வக்காலங்களிலே, தென்னிந்தியாவினின்றும் கொணர்ந்துகுடியேற்றிய பழைய சைவசமய சமாசியத்தவர்களாகிய நாங்கள், புண்ணிய பூமியாகிய பரதகண்டத்தில், சமயஆசார ஒழுக்கங்களில் தலைசிறந்துவிளங்கும் கள்ளிக்கோட்டையைச் சார்ந்த குருவாயூரிலே உள்ளவரும், கல்வி அறிவு ஒழுக்கங்களில் மேம்பாடுடையவரும், மலைகலங்கினும் நிலைகலங்காத உறுதியை உடையவரும், வேதஒழுக்கமும் ஆகமஒழுக்கமும் நிலைபெறும்படி முயற்சிசெய்துவருபவரும், சகலசற்குண சம்பன்னரும், குருவாயூராலயதர்மகர்த்தாவும் ஆகிய ஜாமொரின் அவர்கள் திவ்விய சமுகத்தில் செய்துகொள்ளும் விக்ஞாபனத் திருமுகமாவது:-கேலப்பனும் அவரைப்பின்பற்றிறவர்களுமாகிய பலர் நேர்முகத்திலும் கடிதமூலமாயும் வைதீக சைவ வைணவக் கொள்கைகளுக்கு முற்றும் முரணானதாக, ஆதிகாலம்முதல் இதுவரையும் வழக்கத்தில் இல்லாததாக, வேதாகம விதிகளுக்கு நேர்விரோதமாகப் பஞ்சமரை ஆலயத்துள்ளே விடுதல்வெண்டுமென நிர்ப்பந்தம் செய்வதாயும், அதனைத் தாங்கள் சிறிதும் பொருட்படுத்தாது தீரமாகநின்று சமயங்களையும் சாஸ்திரங்களையும் ஒழுக்கங்களையும் பரிபாலித்துவருவதாயும், பத்திரிகைகள் வாயிலாக அறிந்து, பேரானந்தமுடையவர்களாய் மனதாரப் போற்றுகிறோம். சிலகாலத்தின்முன்னே ஆருகதம் பௌத்தம் முதலிய சமயங்கள் வீறுகொண்டு எழுந்தபோது, திருஞானசம்பந்த சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள், ஆதிசங்கராச்சாரிய சுவாமிகள் முதலிய சமயாசாரியர்கள் வைதிக சைவசமயங்களை நிலை நிறுத்தினார்கள். சங்கராசாரிய சுவாமிகள் தங்கள் ஊரிலே பிறந்தவரேயாகும். அவர் செயல்களெல்லாம் தாங்களறிந்திருப்பீர்கள். சாதிசமயங்களுக்குக் கேடுவருங் காலங்களில் தங்களைப்போன்ற பேரறிஞர் தலைநின்று "அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்சவருவதும் இல்லை" என்றபிரகாரம் யாதுவரினும் அஞ்

சாது சமய சாஸ்திர ஒழுக்கமுறைகளை நிலைநிறுத்தி வைக்கும்படி நாங்கள் மிகவும் தங்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். சீவகாருண்ணியமே ஒருவடிவமெடுத்தாற்போன்ற திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் சமணரைவாதில் வென்று கழுவேற்ற ஒருப்பட்டிருந்தார்கள். கேலப்பனோ, அவரைப்பின்பற்றும் ஒருவரோ, அல்லது பலரோ, ஆயிரக்கணக்கானவர்களோ, பட்டினி இருந்து உயிர்விட நேர்ந்தாலும் அதனால்வரும் பழிபாவங்கள் தங்களைச் சாரமாட்டாதனவேயாகும். இன்னும் பொதுஜனவாக்கு எதற்காக? குருவாயூராலயம் இருக்கிறதா? இல்லையா? என்பதற்காகவோ. ஆதிமுதல் நடத்தியவைகள் தவறுதலானவைகள் என்பதற்காகவோ? அல்லது சாஸ்திரங்களில் சொன்னவைகள் தவறானவைகள் என்பதற்காகவோ? சாஸ்திரங்களில் எப்படிச்சொல்லியிருந்தாலும் தாங்கள் அதை ஒப்புக்கொள்ளவில்லை என்பதற்காகவோ? என்பன தெரிதல் வேண்டும். வைதீக சைவ வைணவ பக்த சிரோமணிகளாயுள்ளவர்கள் கடவுளிடத்திலும் அவர் அருளிச்செய்த வேத சிவாகமாதிகளிடத்திலும் ஒழுக்க முறைகளிடத்திலும்,குன்றாத நம்பிக்கை இருக்கும்பொழுது, பொதுஜனவாக் கெடுப்பதற்கு அவசியமே இல்லை. ஆனால், "அம்மி மிதக்குமா? தாழுமா" எனப் பொதுஜனவாக் கெடுப்பதே பாமர ஜனங்கள் செயலாகும். இனி, வைதீக சைவ வைணவக் கொள்கையினர் எங்கேயிருந்தாலும் அவர்களுடைய அந்தராத்மாவானது, குருவாயூ ராலயத்தையும், தங்கள் செயற்கருஞ் செயலையும் நோக்கியவண்ணமாகச் சுற்றிக்கொண்டேயிருக்கின்றது என்பதை மிக வணக்கமாகத் தெரிவித்துக்கொள்கிறோம். மலையாளத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் பண்டுதொட்டுச் சாதி சமய ஒழுக்க உரிமை உளது என ஞாபக மூட்டுகிறோம். எங்கும் நிறைந்து எல்லாமியற்றுவிக்கும் முழுமுதல் தங்களுக்குத் தீர்க்காயுளையும், சுகவாழ்வையும், மனங் கலங்காத உறுதிநிலையையும், மங்களத்தையும் அருள்வாராக.

——

## இராஜப் பிரதிநிதி அவர்களுக்கு விண்ணப்பம்.

(மொழிபெயர்ப்பு.)

இலங்கை யாழ்ப்பாணத்திலுள்ள இந்து சைவ சமயத்தினர் ஆகிய நாங்கள் எங்கள் தொல்லைகளைத் தங்கள்முன் கூறி அவற்றினின்று நீக்கம் பெறவேண்டித் தாழ்மையுடன் செய்துகொள்ளும் விண்ணப்பம்.

1. ஆகம விதிகளின்படி நடத்தப்பட்டு வருகிற கோயில்களுள்ளே அவ் விதிகளுக்கு மாறாகப் புகுபவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என இப்போது பழக்கத்திலிருந்து வருகிற சட்டத்தை விலக்குவதற்காக ஒரு மசோதா சென்னை சட்டசபைக்குச் சமீபத்தில் கொண்டுவரப்படுவதாகத் தெரியவருகிறது.



2. தென் இந்தியாவிலுள்ள கோவில்களை வணங்குபவர்களில் நாங்கள் ஒரு முக்கியமான வகுப்பினர். எங்கள் முன்னோர்கள் சிதம்பரம், இராமேசுவரம், திருச்செந்தூர், வேதாரணியம் இந்தக் கோயில்கள் ஆகம விதிகளின்படி நடத்தப்பட்டு வரவேண்டுமென்று, அக் கோயில்களுக்கு ஏராளமானவிலையுயர்ந்தசொத்துக்களைத்தருமசாதனமாகக் கொடுத்திருக்கிறார்கள்.

3. இந்தியாவிலுள்ள சிவாலயங்கள், சிவாகமங்களில் விதிக்கப்பட்டபடி கட்டப்பெற்றிருக்கின்றன. அவ் வாலயங்களை வணங்குபவர்களும், ஆகமங்கள் இறைவனாலேயே அருளப்பெற்றன வென்று நம்புகிறார்கள். ஆகமங்களின்படி ஒவ்வொரு சாதியாரும் குறிப்பிட்ட விருத்தியையே செய்ய வேண்டியவர்கள். வணக்க முறைகளும் சாதி (வருணம்) ஆச்சிரமம் (வைதீகவொழுங்கு) இவற்றிற்குத் தக்கபடி பேதப்படுகின்றன. தீண்டப்படாதார்க்கு மட்டுமல்ல. உயர்ஜாதி இந்துக்களுக்கும் இருந்து வணங்கத்தகுந்த இடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. உயர்ஜாதி இந்துக்களும் காலக்கிரமங்களில் தீண்டப்படாதவர்களாகிறார்கள். அப்போது அவர்களும் தீண்டப்படாதாரோடு வெளிப்புறத்திலிருந்து வணங்கவேண்டும். இந்த விதிகள் ஆலயங்கள் அமைக்கப்பெற்ற காலமுதல் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

4. இப்பொழுது இருக்கிற சட்டமானது ஒருவருடைய அல்லது ஒரு தொகுதியாருடைய பாத்தியங்களை எவ்விதத்திலும் தடைப்படுத்துகிறதில்லை. ஒருவன் தான் தழுவியிருக்கிற மதத்தில் தனக்கு அபிப்பிராய பேதமேற்பட்டால், தான் தகுதியாக எண்ணுகிற வேறுமதத்தில் சேர்தல், அல்லதுஒருபுதுமதத்தை உண்டாக்குதல், தான்விரும்புகிற மதத்துக்கேற்ற கடவுளை வணங்கல் என்பது உலகமுழுவதும் உள்ள வழக்கம். இம்முறையேபற்றி புரோட்டீஸ்டெண்டு கிறிஸ்தவர்களும் கத்தோலியர்களிலிருந்து பிரிந்து தங்களுக்காக வேறுகோயில்களையும் கட்டிக்கொண்டார்கள். இந்தியாமட்டும் இவ்விதிக்கு விலக்கானதல்ல. ஆதியில் இந்துக்களாயிருந்த புத்தர்களும் பிரிந்து தங்களுக்காகச்சொந்தக்கோயில்களைக் கட்டினார்கள். அவ்விதமே ஆரியசமாஜத்தாரும் பிரம்மசமாஜத்தாரும் இந்துக்களிலிருந்து தாங்கள் பேதப்பட்டவுடனே வேறு கோவில்களமைத்துக்கொண்டார்கள்.

5. ஆகமோக்தமாயிருந்து வழங்குகிற சட்டங்களை நிராகரித்துப் புதிதாக கொண்டுவந்திருக்கிற மசோதாவைச்சட்டசபை அனுமதிப்பதானால் அது எங்கள் மத உரிமைக்குப்பெருத்த தடையாகவும் எங்கள் மதவுரிமையைப்பற்றிய மகா சாசனமென்று நாங்கள் கருதியிருக்கும் விக்டோரியா மகாராணியாரது அறிக்கைக்கு முரணானதாகவும் இருக்கும். அன்றியும், அர

சாங்கத்தாரிடம் அதிருப்தியையும் வேறுபாட்டையும் உண்டாக்குவ தல்லாமல், நாட்டில் சாதிக்கலகங்களும் பெருந் துன்பங்களும் விளைய இடங் கொடுப்பதாகவும் இருக்கும்.

6. இந்த ஆலயங்கள் புனிதமான தரும ஸ்தாபனங்களாக அரசாங்கத்தார் வசமாய் இருக்கின்றன. அவைகளை ஆதியில் அமைத்தவர்களுடையவும், ஆதரித்தவர்களுடையவும், அவைகளுக்கு நன்கொடை கொடுத்தவர்களுடையவும் கருத்துக்கு மாறுதலில்லாத வகையில் தருமகர்த்தர்கள் நடத்திவருகிறார்களா என்று கண்காணிப்பது அரசாங்கத்தாரின் பொறுப்பில் இருக்கின்றது. ஆலயப்பிரவேசத்தில் ஊக்கமுள்ளவர்களும், எங்கள் மதநியதிக்கு விரோதமாக ஆலயங்களில் பிரவேசிக்க எண்ணமுள்ள தாழ்ந்தவகுப்பினரும் உண்மையில் எங்கள் மதத்தில் சேர்ந்தவர்களல்லர். ஆகையால், பிரமஆரியசாமாஜத்தாரைப் போல் அவர்கள் வேறுகோயில் அமைத்து உட்சென்று வணங்குதல் பொருத்தமானது.

7. மற்ற மதஸ்தர்களைப்போல நாங்கள் எங்கள் மத ஆதாரங்களுக்குவிரோதமாக நடக்கிறவர்களையும், பிரசங்கிக்கிறவர்களையும் விலக்குவதற்கும் தகுதியான நிலைமையில் இல்லை. இதனால், எங்கள் மதத்துக்குப் பெரும் விரோதிகளாக மதிக்கப்பட்டவர்களும் தாங்கள் எங்கள் மதத்தைச் சேர்ந்தவர்களென்று சொல்லிக் கொள்ளுவதால், எண்ணிறந்த தீமைகளைச்செய்கிறார்கள். ஆலயப்பிரவேசத்தில் முயற்சிப்பவர்கள், ஆகமப் பிரமாணங்களை நிந்திப்பவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் கட்டாய ஆலயப்பிரவேசத்தினால் ஆகமங்களைச் சூன்யமாக்கிக் கோயில்களிலுள்ள விக்கிரகங்களை வெளியேற்றி விடுவார்களோ வென்று நாங்கள் பயப்படுகிறோம்.

8. இந்தியாவில் மகமதியர்களாலும் இலங்கையிற் போர்த்துகேசியர் டச்சுக்காரர்களாலும் வருத்தமுற்றகாலத்தில், எங்கள்மதத்திற்குப் பிரிட்டிஷ் அரசாங்கம் செய்த ஆதரிப்பை என்றும் போற்றிவருகிற நாங்கள் அரசாங்கத்தாரிடத்து விசுவாசம் உள்ளவர்களாக இருக்கிறோம்.

9. ஆகையால், எங்கள் ஆலயங்களின் தூய்மையைக் கெடுக்க எண்ணிக்கொண்டிருக்கிற பிறழ்ச்சிக்காரர்களிடமிருந்து புதுமசோதா சபையில் புகவொட்டாது தடுத்து, இராஜப்பிரதிநிதியாகிய தாங்கள் முன்னைய பிரிட்டிஷ் அரசர்களைப் பின்பற்றி, எங்கள் மதத்தைக் காத்தருளி உதவ வேண்டுகிறோம்.

---

உ

# பருவத்தே பயிர்செய்.

பருவத்தே பயிர்செய் என்பதற்கு, பயிர்களை அதுஅது விளையும் பக்குவ காலத்திலே வேண்டும் முயற்சியிலே வழுவாமல் இடு என்று பொருள். பயிருக்கு வேண்டும் முயற்சிகளாவன, உழுதல், எரு இடுதல், களை பிடுங்குதல், நீர் பாய்ச்சல், காத்தல் என்கிற ஐந்துமாம்.

எந்த எந்தப் பயிரை எந்தஎந்தக் காலத்திலே இடவேண்டுமோ அந்தஅந்தக் காலத்திலே முயற்சியோடு இடுதல் வேண்டும். பயிரிடற்கு உழவு இன்றியமையாதது. ஆதலால், உழுதலை முதற்கூறினும். உழுது பயிர்செய்வோர்களை ஏனையோரெதிர்பார்த்தல் வேண்டும். உழுது பயிரிடுந்தொழிலுக்கு வேளாண்மை என்று பெயர். இதுபற்றியே உழுதுபயிரிடுவோர்க்கு வேளாளரெனப் பெயர் வந்தது. உழுதுண்டுவாழ்வதற் கொப்பான வாழ்வு பிறிதில்லை.

> "உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
> பழுதுண்டு வேறோர் பணிக்கு" (ஔவையார்.)

உலகமானது உழவுத்தொழிலான் வரும் மெய்வருத்த நோக்கிப் பிறதொழில்களைச் செய்து திரிந்தும், ஏருடையார் வழியதாயிற்று. ஆதலால், உழவுத்தொழிலே தலையாயது. பிறதொழின்மேற் செல்வார் யாவரையுந் தாங்குதலால், உழுது பயிரிடுவோர்கள் உலகத்தாராகிய தேர்க்கு அச்சாணியன்னவர்கள். உழவுத் தொழிலை செய்து தாமுமுண்டு வாழ்பவர்களே தமக்குரியராய் வாழ்பவர்கள். உழுதுண்பவர்கள் பிறர்பாற் சென்றிரக்கமாட்டார்கள். இரப்பவர்கட் கியன்றவளவு இல்லெனாது ஈவார்கள். ஒரு நிலத்தினை யுழுதவன் புழுதியை நன்கு புலரவிடுவனேல் எருவையு மெதிர்பாராது அந்நிலத்திட்ட பயிர் செழித்து விளையும்.

> "தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும்
> வேண்டாது சாலப் படும்." (திருக்குறள்.)

எருவையும் மிகுதியாக விளைநிலத்துக்குப் போடவேண்டும். பயிர்களைச் செழித்துவளரவிடாமல் மேலெழும் களைகளையும் பிடுங்குதல் வேண்டும். நீரைப்ப் கட்ட வேண்டும். அதனையும் அளவறிந்து

பாய்ச்சல் வேண்டும். இவ்வளவு செய்து பயிர்களைப் பட்டிமாடுகள் மேய்ந்தழியாது காத்தல் வேண்டும்.

"ஏரினு நன்றா லெருவிடுதல் கட்டபின்
நீரினு நன்றதன் காப்பு" (திருக்குறள்.)

நிலத்திற்குரியவன் நாடோறுந் தன்விளைநிலத்துக்குச் சென்று பார்த்து அடுத்தன செய்தல் வேண்டும். இன்றேல் லவனில்லாள் போலத் தன்னகத்தே வெறுத்துப் பின் னவனோ டூடிவிடும்.

நாம் வறுமையாற் பீடிக்கப்பட்டோம் என்று சோம்பி யிருப் பவர்களை, நிலமகளானவள் பரிகசிப்பாள். அன்பர்காள்! ஒவ்வொ ருவரும் தம் விளை நிலத்தைக் காலமறிந்து வேண்டிய முயற்சியில் வழுவாமல் உழுது பயிரிட்டுத் தாமுண்டலே தலையாயது.

"சீரைத் தேடி னேரைத் தேடு"
"மேழிச் செல்வம் கோழை படாது"

உழுதுண்போர் உழுவித்துண்போர் என வேளாள ரிருவகைப் படுவர்.

## மன்றுபறித் துண்ணேல்.

மன்றுபறித் துண்ணேல் என்பதற்கு, தருமசபையிலே இருந் துகொண்டு வழக்குத் தீர்ப்புக்கு வருங்குடிகளுடைய பொருளைக் கவர்ந்து சீவனம் பண்ணாதே என்றுபொருள்.

உள்ள வழக்கிருக்க, ஊரவர்கள் பொதுவாகவிருப்ப, உள்ள தை வாய்வன்மையால் மறுத்துப்பேசி பொருள் பறித்துண்பவனு டைய சந்ததியறும். வழக்கிழந்தோ னழுதகண்ணீராகிய வாளானது சந்ததியை யறுக்கும். வழக்கோரஞ் சொல்லிப் பொருள் பறிப்பவ னது வீட்டில் வேதாளம் சேரும்; வெள்ளெருக்குப்பூக்கும்; பாதா ளமூலி என்னும் கொடிபடரும்; மூதேவி வாழ்வள்; பாம்பு குடி புகும்.

"வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே—மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரஞ் சொன்னார் மனை." (ஔவையார்.)

ஓரமயம் . ஔவையாரும் கம்பரும் காட்டு வழியே சென்றபோ து இலையுதிர்ந்த நெல்லிமர மொன்றைக் கண்டார்கள். கண்டவுடன்



ஔவையார், 'கல்வி யுடையீர் கருங்கா னகத்திடையே, நெல்லி யிலையுதிர்ந்து நிற்பதெவன்" என்றார். உடனே கம்ப நாடர் "வல்லாய் கேள், வெல்லா வழக்கை நிலைவாங்கி வெல்விக்கும், வல் லாளன் சுற்றம்போன் மாண்டு" என்றார்.

மநுநீதிகண்ட சோழர்பெருமான் திருவாரூரிலிருந்து செங் கோல் செலுத்திவந்த காலத்து ஓர்நாள் அவன்மகன் தேரேறி வீதிவழிவந்தான். ஓராவினிளங்கன்று தேர்க்காலிலகப்பட்டிறந்தது. தாய்ப் பசுவானது ஆராய்ச்சிமணியைத் தன் கோட்டான் முழக்கி யது. அதுகேட்ட சோழன் விசாரித்தறிந்து தன்மகனைத் தேர்க்கா லிலிட்டுக் கொல்லுமாறு மந்திரிக்கு உத்தரவிட்டான். மந்திரி அவ் வண்ணம் செய்யத் துணியாது தன்னுயிரைவிட்டான். அதன்பிறகு மநுநீதிகண்ட சோழன் தன்மகனைக் கீழே படுக்கச்செய்து அவன் மேல் தானே தேரை ஓட்டினான். அப்போது சிவபெருமான் இட பாரூடராய்க் காட்சி கொடுத்தார். இறந்தபசுவின் கன்று, மந்திரி, அரசகுமாரன் ஆகியமூவரும் உயிர்பிழைத்தெழுந்தார்கள். மநுநீதி சோழன் முறை யொன்றினையே கொண்டான். இதுபற்றியே,

"கறவைக்கன் றூர்ந்தானைத் தந்தையு மூர்ந்தான்
முறைமைக்கு மூப்பிளமை யில்"

என மூன்றுறையரையரும் மொழிந்தார்.

தருமசபையில் இருந்து கொண்டு வழக்குத் தீர்ப்புக்குவருப வர்களுடைய பொருளைக் கவர்ந்துண்பவர்களை எல்லாரும் பழிப்பார் கள். இம்மையிலே பழிக்கப்படுவதன்றி, மறுமையிலே எரிவாய் நிர யத்து எண்ணில் காலம் வருந்தி, மீண்டும் பூமியிலே எண்ணில்லாத இழிபிறப்புக்களை எய்தியுழன்று வாய்ப் புண்ணினராயும், ஊமைக ளாயும், இருமல்யுமழிக்கும் வறுமையாளர்களாயும் வருந்துவார்கள்.

அன்பர்காள்! தருமசபையிலிருப்பவர்கள் நடுநிலைதவறாது வழக் குத்தீர்ப்புச் செய்தல் வேண்டும் என்பது இதனாற் பெறப்பட்டது.

## இயல்பலாதன செயேல்.

இயல்பலாதன செயேல் என்பதற்கு, தருமநூலுக்குப் பொ ருத்த மல்லாதவைகளை நீ செய்யாதே என்று பொருள். தரும நூலுக்குப் பொருத்தமானவைகள் செய்யத்தக்கவைகள். பொருத்த மல்லாதவைகள் செய்யத்தகாதவைகள். செய்யத் தகாதவைகள் தீவி னைகள். செய்யத்தக்கவைகள் நல்வினைகள். நன்மை தீமைகளைப் பகுத்

தறியும் அறிவையுமுடைய நாம், தக்கவின்ன தகாதன இன்னவென், றெக்கவுன்னித் தக்கவே செய்தல்வேண்டும். தகாதன செய்தல் தகாது. செய்யின் மக்களாகாது மாக்களாவோம்.

தீவினையைப் பெரியோர்கள் செய்யமாட்டார்கள். தனக்குஇன்பந் தருதலைக் கருதிச் செய்யும் தீவினைகள் பின் இன்பந்தராது துன்பமே தருதலால் தீயினும் கொடிதாம். தீயவினைகளை ஒருவன்செய்தால் அத்தீவினையானது தன்னையுடையான் எங்கு சென்றாலும் தொடரும்.

எந்த உடம்போடு எந்தஇடத்திலேபோய்ப் பிறந்தாலும் விடாது தொடரும். இதுபற்றியே நமது மாதவச் சிவஞான யோகிகள்,

"சீருடைப் புவனந் தோறுஞ் சிதறிய வினைக ளெல்லாம்
ஓரிடத் தொருவன் றன்பா லுடங்குசென் றுறுதல் போலும்'

என்று திருவாய் மலர்ந்தருளினார்கள்.

தீவினை—தீயையொத்த வினை என்று பொருள்படும். தீய்க்கும் வினை, அஃதாவது அழிக்கும்வினை. எதனை யழிக்குமென்றால் நன்மைகளை அழிக்கும் வினை என்றும் பொருள்.

கள்ளுணல், களவு, பொய், காமம், கொலை, சூதாடல் முதலியன தீவினைகளாம்.

இன்னோரன்ன தீச்செயல்களைச் செய்யாது தருமநூலுக்குப் பொருத்தமான நல்வினைகளையே நாம் செய்தல் வேண்டும்.

## அரவ மாட்டேல்.

அரவமாட்டேல் என்பதற்கு, நஞ்சையுடைய பாம்புகளைப்பிடித்து நீ ஆட்டாதே என்றுபொருள்.

பாம்பாட்டி பாம்பாலிறப்பான் என்று ஓர் பழமொழி உண்டு. பாம்பானது பாம்பாட்டுவோன் எப்போது ஏமாறியிருப்பான் என்றுபார்த்திருந்து கடித்துவிடும். பாம்பாட்டி என்ன செய்தாலும் அடங்கியிருந்தும் சமயம் பார்த்துக் கடித்துவிடும்.

இதனால், நாம் அறியக்கிடப்ப தென்ன வென்றால், பாம்பைப் போன்ற தீயவர்கள் நமக்கு அடங்கியிருக்கின்றார்கள் என்றெண்ணி, அவர்களை அடிக்கடி வேலை ஏவல்கூடாது. அங்ஙனம் நாம் ஏமாறியிருக்கும் சமயம்பார்த்து நமக்கு மோசஞ்செய்வார்கள் என்பதே.

இது பிறிது மொழிதல் என்னு மலங்காரம்.

க. ஐயாறுப்பிள்ளை, தமிழ்ப் புலவர்.

---

உ

# காந்தியும் சமயமும்.

---

திருவாளர் க. ராஜமாணிக்கப் பிள்ளை அவர்கள்.

சைவம், வைஷ்ணவம், ஸ்மார்த்தம், மத்வம் என்னும் நான்கும் இந்நாட்டுப் பழங்கால மதங்கள். மத்வத்தைப் பரப்பிய கடைசியாசிரியர் மத்வாசாரியர். ஸ்மார்த்தமாவது மாயாவாதம். அதனைப் பரப்பிய கடைசியாசிரியர் சங்கராசாரியர். வைஷ்ணவத்தைப் பரப்பிய கடைசியாசிரியர் ராமாநுஜாசாரியர். சைவத்தைப் பரப்பியகடைசியாசிரியர் ஸ்ரீமத் சிவஞானசுவாமிகள். இந்நால்வரும் பாஷ்யகாரர். முதல் மூவர் பாஷ்யங்களும் அவற்றின் மூலமாகிய வியாசசூத்திரமும் வடமொழியிலுள்ளன. நாலாவார் பாஷ்யமும் அதன் மூலமாகிய மெய்கண்ட சூத்திரமும் தமிழ்க்கணுள்ளன. இவையெல்லாம் அவ்வம்மதத்தின் ஞானபாகம். மற்றொன்று கருமபாகம். அது அகோரர் சோமசம்பு முதலிய ஆசாரியர் செய்த பத்ததிகள். ஞானம் அங்கி. கருமம் அங்கம். இரண்டில் எதுவுந் தனித்து நிலையாது. இரண்டும் அவசியம். அங்கத்தைக்கொண்டு அங்கியை அறியலாம். அங்கியைக்கொண்டு அங்கத்தை ஆராயலாம். ஒவ்வொரு மதத்திலும் அதன் ஞானசாத்திரங்களுக்கேற்ப அதன் கருமசாத்திரங்கள் அமைந்திருக்கும். இந்த இரண்டில் எந்தவொன்று குன்றினும் மதமென்பதில்லை. மனிதனும் இந்த இரண்டையும் ஒருங்கு பற்றினலொழிய மதஸ்தனாகமாட்டான். பதி பசு பாசங்கள் அநாதிநித்யம் என்னும் ஞானபாகத்தையும், சிவதீக்ஷை பெற்று விபூதி ருத்ராக்ஷமணிந்து கொள்ளல் என்னுங் கருமபாகத்தையும் சேரஆசரியாதவன் சைவமதஸ்தனாதல் எவ்வாற்றானுமில்லை. இப்படியே மற்றமதங்களையும் மதஸ்தர்களையுங் கண்டுகொள்க. ஞானபாகந் தத்துவமெனவும், கருமபாகம் ஆசாரமெனவும் படும். இவ்விருபாகங்களுக்கும் பரமாதாரம் இருக்குமுதலிய வேதங்கள் நான்குமாம். அவை ஞானகாண்டம் கருமகாண்டம் என இரண்டாகப் பகுக்கப்பட்டுள்ளன.

இந்து என்பது ஒரு பாரசீக பதம். திருடன் கறுப்பன் என்பன அதன் செம்பொருள். 10-11-1930 'திராவிட' னில் வெ

ளியான 'இந்துமதப்பைத்தியம்' என்னுங் கட்டுரையில் அப்பதசரிதம்தெளிவு. அது சிலகாலமாகப் பரதகண்டத்துப் பழையமதங்களுக்கெல்லாம் பொதுப்பெயராய் வழங்கிவருகிறது. குதிரையும் மிருகம். கழுதையும் மிருகம். ஆயினும் இரண்டும் பேதப்பொருள்களே. அப்படியே சைவமும் வைஷ்ணவமுதலிய மற்றமதங்களும் இந்துவாயினும் பேதமுடையனதான். ஆனால், இந்துவென்னுஞ்சொல்லையே காந்தி தமது மதப்பெயரெனப் பேசிவருகின்றார். பலர் அதனால் ஏமாறுகின்றனர். அவ் வேமாற்றத்தைத் தவிர்ப்பது அப்பெரியார்க்குத் தலைக்கடன். அப்பொருட்டு அவர் தம்மைச் சைவரென்றோ வைஷ்ணவரென்றோ வேறு இன்ன மதஸ்தரென்றோ சொல்லி வெளிப்படுவதுதான் வழி.

பதி பசு பாசங்கள் அநாதிநித்யம் என்னும் சைவஞான நூல்கள். பதியொன்றே அநாதி நித்யம்: பசு பாசங்கள் மித்தை என்னும் மாயாவாத ஞான நூல்கள். பதியொன்றே அநாதிநித்யம்: பசு பாசங்கள் அதன் குணம் என்னும் வைஷ்ணவ ஞான நூல்கள். பதிபசுக்களே அநாதிநித்யம்: பாசம் பசுவின் குணம் என்னும் மத்வஞான நூல்கள். அப்படியே காந்தியின் இந்துஞானக் கொள்கையும் இன்னது எனத் தெரியவேண்டும். அதுவரைச் சைவ முதலியவற்றிற்கு அவரது இந்து புறமாதல் திண்ணம்.

ஒழுக்கம் இருவகைப்படும். ஒன்று பொது. ஒன்று சிறப்பு. பொது சகலமதஸ்தரும் அநுஷ்டிப்பது. பொய்யாமை கள்ளாமை முதலியன அது. சிறப்பு தனிப்பட்ட மதஸ்தர் ஆசரிப்பது. சிவாலயசேவை சிவபுராணபடனம் முதலியன அது. சிறப்பொழுக்கமே மதாசாரம். ஒரு மதத்தினின்றும் மற்றொரு மதத்தைப் பிரித்துக் காட்டுஞ் சாமர்த்தியம் அதற்கேயுண்டு. கிறிஸ்தவம் மகமதியம் முதலிய பிறமதங்களி லில்லாத சிறப்பொழுக்கம் காந்தியிடம் எதுவுமில்லை. ஆகலின், கிறிஸ்தவ மகமதியங்களை அவரது இந்துவுமென்று என் சொல்லக் கூடாது?

ஒவ்வொரு மதத்துக்குஞ் சின்னங்கள் உள. விபூதி ருத்ராக்ஷதாரணஞ் சைவசின்னம். ஊர்த்வ புண்ட்ர தப்தமுத்ராதாரணம் வைஷ்ணவ சின்னம். இந்நாட்டுச் சகல பிராசீன மதங்களுக்குஞ் சரித்திர பொக்கிஷமாயுள்ள எல்லாப் புராணேதிகாசங்களிலும்



ஞானிகளாயுள்ளா ரனைவரும் மதசின்ன தாரணிகளாகவே வர்ணிக்கப்பட்டனர். வேதமும் 'திக் பஸ்ம ரஹிதம் பாலம்', 'பஸ்மதாரண ஸம்பந்நோ மம பக்தோ பவிஷ்யதி' என ஏற்றிடிபோல் முழங்குகின்றது. திருநீறில்லாத நெற்றியைச் சுடு, எனது பக்தன் விபூதி தாரண சம்பத்தோடு வாழட்டும் என்பன முறையே அவற்றின் பொருள். இரண்டாவது வாக்கியம் விஷ்ணு தமது பக்தர்களின் பொருட்டுச் சிவபிரானிடஞ் செய்துகொண்ட பிரார்த்தனையாகும். எல்லாம் பொய்யென்னும் மாயாவாதம் பேசிய சங்கராசாரியரும் விபூதி ருத்ராக்ஷதாரணத்தோடுதானே தமதாயுள் முழுதுஞ் சரித்தார். காந்தியும் பெண்டிர்கையாற் குங்குமமிட்டுக்கொள்வர்; எளியவுடை யணிந்து தம்மைக் கீழ்நாட்டவரெனக் காட்டுவர். மூந்நிறத் துணியை வணங்கித் தமது நாட்டுப் பற்றை வெளிப்படுத்துவர். இங்ஙனம் மற்றச் சின்னங்களை மதிக்கக் கற்ற மகாத்மா மதச் சின்னத்தை அறவே மறந்தார். அது ஒழுங்குதானா? உலகில் எந்த மனிதனும் ஏதேனும் ஒன்றைக் குறிக்கொண்டே மீசை வைப்பான். காந்திக்கு மீசை யிருக்கிறது. ஒருக்கால் அவரது இந்துவுக்கு அம் மீசைப்பொருளே சின்னம்போலும்.

பாரம்பரியங்கள் மதிப்பதும், எண்ணிறந்த ஞானவான்கள் ஆராய்வதும், ஏனைச் சாத்திரங்களெல்லாம் வழி சார்புகளாய்ப் பின்பற்றி நடப்பதும் எந்தச் சாத்திரமோ அதுவே சர்வ பிரமாண சாத்திரம். பாரம்பரியமாவது ஆசாரிய பரம்பரை. அம்படிக் குரு மகாஜனம் சாத்திரம் என்னும் இம் மூன்றாலுஞ் சுயம்பிரமாணம் எனத் துணியத்தக்கது இருக்காதி வேதங்கள். கீதையன்று. ஸ்ரீமத் அருணந்திசிவம் கீதையைத் 'தேர்த்தனி லிருந்து மாலைய செய்து மால் கொல்லச் செப்பும் வார்த்தை' என வொதுக்கிப் 'புரங்கொல் நூல்' ஆகிய பிடகத்தோடு சாமியப்படுத்துகின்றது. காந்திக்குக் குரு இந்துவில்லை. மகாஜனம் என்பது ஞானவான்களையன்று, முழுமூடரேயாயினும் பெரும்பான்மைக்(Majority) கணக்கையே. வேதமுதல் எல்லா மதநூல்களும் பொய் நிறைந்தனவே. ஆகையாற்றான் அவர் கீதையை வேதத்தினும் விசேடமாய்க் கொண்டனர். என்னே, சாத்திரவரம்பு துணிந்த அவரது சாமர்த்தியம்! அவர் சொந்தக்காரரில்லாத நாய்களைச் சுட்டுவிடச் சம்மதித்தார். கள்ளுத் தருகின்றன எனப் பச்சைப் பசுமரங்களை வெட்டிவீழ்த்

தினர். நோயால் நொந்த பசுவின் கன்றை நஞ்சேற்றிக் கொன்றார். ஆகவே, கீதை கொலைநூலென்பது அக் கீதாநுசாரியாலும் விளங்கிற்று. எல்லார்க்குந் தெரிந்த இந்துவுக்கு வேதமே பிரமாணம். காந்தி வேத நிந்தகர். ஆகலின், அவரது இந்து ஒருவர்க்குந் தெரியாதது.

காந்தியை மகமதியர் மகமதியப் பெரியாரென்றும், கிறிஸ்தவர் கிறிஸ்தவப் பெரியாரென்றும், பௌத்தர் பௌத்தப் பெரியாரென்றும், ஜைனர் ஜைனப் பெரியாரென்றும் சொல்லுகின்றனராம். இந்துப்பெரியா ரொருவர் இங்ஙனஞ் சகலமதப் பெரியாராய் விளங்குவது இந்துவுக்கே ஒரு ஏற்றமல்லவா வெனச் சில இந்துக்கள் கூறி மகிழ்கின்றனர். என்னே, இச்சிலரது மயக்கம்! ஒரு காதருக்கும், ஒரு தாவீதுக்கும், ஒரு கண்ணனுக்கும் காந்தி பொதுவாகலாம். அவர் சொல்லைப் பிரமாணமாகக்கொண்டு அம் மூவருந் தம்முள் அளவளாவலாம். அம்மட்டிலன்றிக் காதர் கிறிஸ்தவத்திலும், தாவீது இந்துவிலும், கண்ணன் மகமதியத்திலுமே வீழ்ந்து உழக்க அவர் வார்த்தை பிரமாணமாகாது. இன்னும், எம் மதமும் சம்மதமென விபசரிக்கும் ஒருவன் எம்மதத்தையுந் திருத்தும் யோக்கியதை பெறான். முழுமூடனும் அவனை நம்பமாட்டான். இதனை உலகம் நன்கு அறிக. இன்னும், சகலமத சம்பந்தராகிய அம் மகாத்மாவிடம் நாஸ்திக புத்தியும் ஏனிருத்தல் கூடாது? அதுவும் ஒருமதமில்லையா?

பரதகண்டம் ஆலயமலிந்த அதிசயநாடு. அவ் வாலயங்களுள் சிவாலயங்கள் மிகவு மதிகம். அவையெல்லாம் சைவத்தொடு சம்பந்தம். சிவாலயப் பிரஸ்தாபம் வேதசிவாகமங்களில் மிகுதி. திருவாரூர், சிதம்பரம், காசி முதலிய சிவதலங்கள் வேதத்திற் புகழப்பட்டுள்ளன. வேதத்துக்குப் பாஷ்யம்போல்வது சிவாகமம். அவ் வாகமரீதியில் ஆலயங்கள் அமைக்கப்பட்டன. அமைத்தவர் அக் காலச்சைவத்தனியரசர். அவை தோன்றத்தொடங்கி நாளிதுவரைப் பல்லாயிர மாண்டுகள் சென்றன. ஒவ்வொரு கோயிலையும் நிறுவியவர் சிலர். அதனைப் பரம்பரையாகக் காத்துவருபவர் பலர். நிறுவியவர்க்கிருக்கும் அவ்வளவு சிரத்தை காப்பவர்க்கிருப்பது கஷ்டம். அதனால், அவ்வப்போது மக்கட்கு மதத்தில் மானங் குறையும். தர்மகர்த்தாக்கள் மூடராயமைவர். ஆகலின், ஆலயங்களில் அநுசிதம் புகுவது எதிர்பார்க்கத்தக்கது. அப்பால் சைவ மகாத்மாக்கள் அதனைப் போக்கும் பொறுப்பை மேற்கொள்வர். அன்னார் சைவ சாத்திர பண்டிதராயு மிருப்பர். உசிதம் அநுசிதம் என்பவற்றைப் பகுத்தறியுந் திறன் அவர்க்கே யுண்டு. கோயிற்பற்றும் அவர் நெஞ்சைவிட் டகலாது. சீர்திருத்தத்தின் பொருட்டு அவர் கையாளும் முறையோ கண்ணியமுடையது. அப் பெரியாரால் கோயில்களிற் கண்ட குறைகள் மக்கட்குச் சூசிப்பிக்கவே படும். அதனையும் மக்கள் கண்டு மனங் குழைந்து கண்ணீருங் கம்பலையுமாவர். மற்றவர் கோயிலிற் செய்யுங் கொடுமையைத் தன் வீட்டிலேயே செய்வதாக எண்ணி மானந் தைக்க மடிவான் சைவன். 'ஆனால், ஏ, ஏ! இவையுங் கடவுள் நிலையங்களா? சீ,சீ!' என்று புறமதத்தவரோடு சைவனுங்கூடிக் கைதட்டி நகைக்குமாறு அநுசிதங்கள் விஸ்தரிக்கப்படவே மாட்டா. விஸ்தரிக்கப்படுவன வெல்லாம் மகாத்மியங்கள்தான். சிவலிங்க மகத்வம், ஆலய தரிசனக் கிரமம், சிவசின்ன மகிமை, நடராஜவைபவம், துவஜாரோகண தாற்பரியம், உத்ஸவ விசேஷம் என்பனவாய பிரசங்கங்களால் அம் மகாத்மாக்கள் சைவ சமயிகளது புத்திமாசைப் போக்குவர். போக்கவே, சைவர்களுக்குக் கோயில்களின்மாட்டு அன்பும் அச்சமும் மீண்டும் உதிக்கும். அதனால் அந் நிலயங்களில் பொல்லாங்கென்பவை யெல்லாந் தவிர்தல் திண்ணம்.



காந்தியோ கோயில்களில் நல்லெண்ணங் கொஞ்சமுங் கொள்ளாதவர். அவர் கோயிலுக்குப் போய்ச் சுவாமி கும்பிடும் வழக்கமே கிடையாது. 'ஆலயங்களெல்லாம் அஞ்ஞானிகட்கே' யென்பது அவரதுகொள்கை. அங்குப்போய் அரனை வணங்கி வந்த ஸ்ரீஞானசம்பந்தரோ ரெல்லாம் அவர்பார்வையில் ஞானங் குறைந்தவர்தான். கோயிலொழுங்காகிய ஆகமங்களை அவர்படித்ததில்லை. அவை அஞ்ஞானிக்கு அபத்தக் களஞ்சியம். 'வெண்ணீறணிகிலாதவரைக் கண்டா லம்மநா மஞ்சு மாறே' 'திருநாமமஞ்செழுத்துஞ் செப்பாராகில்...... ஒருகாலுந் திருக்கோயில் சூழாராகில்...... பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின்றாரே' 'பூணாதே கண்டியினைக் கூசியிடும் புல்லியரைக், காணாதே காணுங் கண்' என்பன சைவ மகாநியர்களது தெய்வவாக்கு. காந்தி நெற்றியில் விபூதியுண்

டா? கழுத்தில் ருத்ராக்ஷமுண்டா? நாவில் பஞ்சாக்ஷரமுண்டா? கையில் பூஜைப் புஷ்பமுண்டா? கால் சிவாலயஞ் சூழுமா? எல்லாம் பாழ். அவர்க்குக் கோவிலிலுள்ள குணந்தான் தெரியுமா? குற்றந்தான் தெரியுமா? சமயத்தில் ஒன்றை மற்றொன்றாய் மயங்கியும் அறியும் அசக்தர் அவர். ஆகவே, ஆலயத்தைப் பற்றிய அறிவும் அன்பும் அவருக்கில்லாமை காண்க.

ஒருகாலத்தில் அவர் ஆலயங்களைத் திருத்தப் போவதாக நடித்துத் தென்னாடு வந்தார். அவரது அந்தரங்கமோ கதருக்குப் பணஞ் சேர்க்கவேண்டுமென்பது. தென்னாட்டார் கோயிற் றிருப்பணியில் பெரும்பணஞ் செலவிடுபவர். அவருள்ளும் நாட்டுக்கோட்டைச் செட்டிமார் என்னுஞ் சாதியார்க்குச் சிவாலயத் திருப்பணி கற்கண்டுகட்டிதான். அவ்விஷயத்தில் எத்தனை லக்ஷமானாலும் அவர் செலவிடப் பின்னிடார். சிவபுண்ணியம் உயிரைக்கொடுத்தும் பெறத்தக்கதல்லவா? காந்தி அத் தருமசீலர்க்கு அப்பணியில் வெறுப் புண்டாக்க எண்ணினார். அந்த எண்ணம் அம் மகாத்மா வாயிலிருந்து ஆலயத்திருத்தம் என்னும் வேடம் போட்டு ஆலயநிந்தனையா வெளியாயிற்று. ஒருவன் ஒருபொருளைத் திருத்தப்பேசுகிறான், அல்லது நிந்திக்கப் பேசுகிறான் என்பது அப்பேச்சைக் கேட்போர் அடையும் மனநிலையால் தெரியும். அப்பொருளைக் கண்டு அவர் ஐயோ! வென இரங்குவாராயின் அப்பேச்சுத் திருத்தங் குறித்ததாகும்: அப்படியின்றி ஏ! ஏ! எனக்கேலி செய்வாராயின் அது நிந்தை குறித்ததேயாம். காந்தி கோயில்களை குச்சுக்காரி வீடுகளென்று கதரில் தமக்குள்ள ஆசையளவுக்குத் திட்டினார். கேட்டவரிற் பலர் கோயில்களைப் பார்த்துக் கைதட்டிச் சிரிக்கலாயினர். குச்சுக்காரி வீட்டில் நலமொன்றுமில்லை, கோயிலும் அப்படித்தான் என்று மகாத்மா மாந்தர்க்கு விளங்கவைத்தார். அதனாற் கோயில்களை மேலும் அநுசிதப்படுத்தப் பலர்க்குத் துணிவும் பிறந்தது. கோயில்களிலுள்ள எந்தக் குணத்தையும் பாராட்டிய பேச்சு எதுவும் அவர் வாயிலிருந்து வந்ததில்லை. காரணம் மேலே காட்டப்பட்டது.

அவர் தமது ஆலய நிந்தாப் பிரசங்கத்தால் களைப்படைந்து சபர்மதிக்குச் சென்று விசிராந்தி யடைந்து வந்தார். சிலமாதங்கள் சென்றன. அவ்வாசிரமத்தில் ஒரு கள்ளப்புணர்ச்சி நடந்தது. காந்தியால் அபிமானிக்கப்பட்ட ஒருத்தியும் ஒருவனுமே அந்த விப



சாரம் புரிந்தவர்கள். இன்னொரு திருட்டும் நடந்தது. அதுதான் சபர்மதியின் பொதுப்பணத்திற் கொஞ்சத்தை மகாத்மாவின் மனைவியாகிய கஸ்தூரிபாய் அபகரித்துக் கொண்டமை. இரண்டையும் அப் பெரியாரே பத்திரிகையில் வெளியிட்டனர். ஆனால், சபர்மதியைக் குச்சுக்காரி வீடென்று மகாத்மா சொல்லவில்லை. சபர்மதியில் நிகழ்ந்த குற்றங்களை நான் ஒப்புக் கொள்ளுகிறேன்: ஆயினுங் கடவுள் எனக்கு அவ்வாசிரமத்திலேயே காட்சி நிச்சயமாக அளிப்பாரென்றநம்பிக்கை திடமாகவுண்டு என்னும் பொருள்பட மக்கள் முன்னிலையில் அதன் பெருமை கெடாதவாறு அவர்சாதுரியமாய்ப் பேசினார். தாம் நிறுவி மேற்பார்த்து வரும் நிலைய மல்லவா அது?

பிரமன் அரி அரன் என்னும் பெயர்கள் ஒரு பொருளையே யுணர்த்தும் என்கின்றார் காந்தி. அமரகோசத்தில் அதற்கு ஆதாரமில்லை. 'பராத்பரதரம் ப்ரஹ்ம தத்பராத்பரதோ ஹரி: | தத்பராத்பரதோ ஹீசஸ் தஸ்மாத் துல்யோதிகோ நஹி' என்பது வேதம். பரனுக்குப் பரன் பிரமன், அவனுக்குப் பரன் அரி, அவனுக்குப் பரன் ஈசன், அவனுக்குத் துல்லியனும் அதிகனும்இல்லையென்பது அதன்பொருள். இன்னும், பிரமன் அரி அரன் என்னும் பெயர்களுக்கும், ஏகோவா அல்லா என்னும் பெயர்களுக்கும் பாஷை வேற்றுமை வெளி. மகாத்மா அவ்வைந்தன் பொருளும் ஒன்றென்று சொல்லுவாரா? அப்போது ஹரிஜனத்தை அல்லாஜனம் ஏகோவாஜனம் என்றுவிளிப்பதற்கும் அவர் தயங்கார். அந்நிய பாஷைச் சொல்லாகிய இந்துஎன்பதைத் தம் மதத்துக்குப் பெயராகக் கொள்வதில் அவர்க்கு லஜ்ஜையில்லை. ஆகலின், அல்லா ஏகோவா என்னும் பிறபாஷைப் பதங்களால் தாம் அபிமானிக்கும் ஜனத்தை அழைப்பதிலும் அவர்க்கு அது வந்துவிடாது. அவர் அதற்குத் துணிவாராயின், தீண்டப்படாதார் மகமதியராவதிலுங் கிறிஸ்தவராவதிலும் அவருக்கே கவலையின்றென்பது சித்திக்கின்றது.

இனிக் காந்தி கருத்துப்படி பிரமன் அரி அரன் என்பன பொருளில் விரோதியா வென்ப திருக்கட்டும். சொல்லளவில் அவை வெவ்வேறுதானே. மகாத்மா தம் பிரிய ஜனத்துக்குப் பெயரிட நேர்ந்த சமயங்கள் இரண்டு. முதற்சமயத்தில் அவர் வைத்த பெயர் தரித்திர நாராயணர் என்பது. இரண்டாஞ் சமயத்தில் அவரிட்டபெயர் ஹரிஜனம் என்பது. எந்தச்சமயத்திலாவது தரித்திரப் பிர

மர், தரித்திரச்சிவர், பிரமாஜனம், சிவஜனம் என்று அவர்பெயரிட்டதில்லை. இந்த உடன்பாடு எதிர்மறைகளால் பிரம அர நாமங்களில் அவருக்கு அருவை யுண்டென்பது விளங்குகிறது. பொருளைவிட்டுப் பெயருக்கு வாதிப்பது ஆளைவிட்டு நிழலுக்கு வாதிப்பதுபோலும் மடமையே யெனச் சிலர் கூறலாம். அவரை ஒரு சாத்தன் பார்த்து 'ஏ! கழுதைகாள், பன்றிகாள், நாய்காள், குட்டிச்சுவர்காள்' என்றழைத்தால் அவையெல்லாம் வார்த்தைகள்தானே யென்று அவர் அவனைச் சும்மாவிடுவாரா? இன்னும் காந்தி ஹரிஜன மென்னும் புதுப்பெயரில் மோகங்கொண்டதும் அக்கிரமமாகும்.

உயர்ந்த சாதியார் இழிந்த சாதியாரைத் திண்டார். இழிந்த சாதியார் உயர்ந்த சாதியாரைத் தீண்டார். ஆனாலும், தீண்டப்படாதா ரென்னும் பெயர் இழிந்தசாதியாருக்கேயிருந்துவருகிறது. தீண்டப்படாதா ரென்பது இழிந்த பிரயோகம். ஹரிஜனமென்பது உயர்ந்தபிரயோகம். இப்போது இரண்டும் பிரதிபதங்களாய் விட்டன. தீண்டப்படாதா ரென்னுஞ் சாதியார் உயரவில்லை. ஹரிஜனம் என்னும் பிரயோகம் இழிவடைந்தது.

தீண்டப்படாதாரின் தொகை ஏழுகோடி யெனக் கணக்கிடப்படுகின்றது. அவருட் பாதிக்குமேற்பட்டவர் சிவவணக்கமுடையவர். காந்தி எல்லாரையும் ஹரிஜனம் என்றார். சைவசமூகம் அதனையெப்படி அங்கீகரிக்கலாம்? ஹரிஜனம் என்னும் பிரயோகத்தால் சிவசமயம் பல்கோடி மக்களை யிழந்துவிடுகின்றது. சைவர்கள் உள்ளத்தில் அது உறைக்கவில்லை. கிறிஸ்தவ மகமதியப் பிரசாரத்தால் சைவம் இவ்வளவு மக்களை இவ்வளவு சீக்கிரத்திற் பறிகொடுத்ததா? காந்தி சைவசமயத்துக்கிழைத்துவருந் துரோகம், அம்மம்ம! அளப்பரிது.

ரவீந்திரநாதர் பிரமசமாஜி. மாலவியா சுத்திக்காரர்(ஆரியசமாஜி) டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் பிரச்சன்ன பௌத்தர். எஸ். எஸ். பாரதி நாஸ்திகர். டாக்டர் சுப்பராயன் பிரமசமாஜி. பிரமசமாஜம், ஆரியசமாஜம், பிரச்சன்ன பௌத்தம், நாஸ்திகம் என்னும் மதங்கள் கோயில்களை யிடித்துத் தரைமட்டமாக்க வேண்டுமென்னுங் கொள்கையையுடையன. சில மாதங்களாகக் காந்தி அம் மதஸ்தராகிய மேற்கண்டவர்களைத் தமக்குத் துணைசேர்த்துக்கொண்டு தீண்டப்படாதார்க்கு ஆலயப் பிரவேசம் வாங்கிக் கொடுக்க அரும் பாடு



பட்டு வருகிறார். ஆலய விரோதிகளாகிய அக் கூட்டத்தார் அத் தப்பாட்டுக்கே அநதிகாரிகள். ரோஷமுள்ள ஒவ்வொரு ஆலய நேசனும் அவர்களைப் பார்த்து 'எனது சமய விஷயங்களிற் பிரவேசிக்க நீவிர் யார்?' என்று கடாவக் கடமைப்பட்டிருக்கிறான். நண்டுக்கு நரி காவலாகுமா? தாலி யறுத்தவளுக்குத் தாரமிழந்தவன் காவலாவானா? அப்படியேதான் அக் கூட்டத்தார்களும் நமக்கு. இந்தியருக்கு நன்மை செய்யவே ஆங்கிலேயர் இந்தியாவை ஆளுவதாகச் சொல்லுகின்றனர். காங்கிரசாருக்கு அதில் நம்பிக்கை யுண்டா? 'எங்களைத் திருத்த நீங்கள் யார்? நீங்கள் இந்தியாவை விட்டுப் போய்விட்டாலே நாங்கள் சுகஜனமாய் விடுவோம்' என்று காங்கிரசார் அந்த அந்நிய ராட்சியை அறவே வெறுக்கவில்லையா? அப்படி ஆலயவிஷயத்தில் மேற்கண்ட ஆலயத் துரோகிகளை ஆங்கிலேயர் ஸ்தானத்தில் வைத்துத் தாம் காங்கிரசு ஸ்தானத்தில் இருந்துகொள்வதே ஆலயநேச அறிஞருக்கு வேண்டுவதாம்.

கண்ணன் விஷ்ணுவின் அவதாரம். அவன் தங்கையை அர்ச்சுனன் மணந்தான். அதனால் அவ் விருவருக்கும் மைத்துனக் கேண்மை யுண்டாயிற்று. ஸி. ராஜகோபாலாச்சாரியார் அர்ச்சுனனாக வேண்டுமென ஆசைப்பட்டுக் காந்தியை விஷ்ணுவி னவதாரமென அடிக்கடி சொல்வார். ஆனால், காந்திக்குத் தங்கையில்லை. மகனுண்டு. ராஜகோபாலருக்கு மகளிருக்கிறாள். அம் மகளை அம் மகனுக்கு மணஞ்செய்து கொடுத்துவிட அவர் எண்ணினார். மணவுறுதியும் ஆய்விட்டதாகக் கேள்வி. மணம் நிறைவேறிவிட்டால்காந்திக்கும் ராஜகோபாலருக்கும் மைத்துனக் கேண்மை நிஜம். பின் அவர் அர்ச்சுனனாவதிற் சந்தேகமுமில்லை. ஆனால், காந்தி மகன் செட்டியார், கோபாலர் மகள் பார்ப்பனி. அவ்விருவருங்கூடிப் பெறும் பிள்ளையுந் தந்தைவழிபற்றிச் செட்டியாரேயாவர். ஆசாரியத்தாத்தாவுக்குச் செட்டிப்பேரன் பிறந்தான் என்ற கதையைச் சநாதனிகள் கேட்டுச் சிரிப்பார்களே யென்றவெட்கம் ஸி-ராவுக்கு இருக்கத்தானே செய்யும். சநாதனத்தை யொழித்துவிட்டால் அத்தொல்லை நில்லாது. ஆகையாற்போலும் அவருங்காந்தியோடு கூடிக் கோவிலாசாரங்களைப் பாழ்படுத்தப் பார்க்கிறார்.

இவ்வாராய்ச்சி இன்னும் நீளும். அதற்குவேண்டிய சரக்கும் உண்டு. ஆனால், பத்திரிகையி லிடங்கிடைப்பது சந்தேகம். சைவர்களுக்கு இதனாலேயே புத்துணர்ச்சி ஏற்படலாம். ஆனால், அவர்களது மயக்கம் எப்படிப்பட்டதோ? அதுதெரிந்து மற்றவை பின்னர் ஆராயப்படும்.

———

உ

# திருவண்ணாமலை

## ஞானதீபக்குடை மஹோத்ஸவம்.

---

திருநாத னும்வாணி கேள்வனுந் தேடித் திகைக்கவன
லுருவாகி நீண்டவண் ணாமலை யார்த முயர்குடையைக்
கருவேதை நீக்கவந் தேத்துமி னீதுநற் காலங்கண்டீர்
குருநாதன் ஞானசம் பந்தன் றிருவருள் கூடிடுமே.

தொண்டைமண்டலம் உயர் துளுவ வேளாள ஜாதி பொன்னேரி மரபு வீரகுட்டிவமிசம் மகா-ா-ா- ஸ்ரீ ஸ்ரீநிவாச முதலியாரவர்கள் சேமித்து வைத்த நிதியினின்றும் இம்மஹோத்ஸவம் வருஷந்தோறும் நடத்தப்பட்டு வருகின்றது. இந்த மஹோத்ஸவ தரிசனத்தினால் நாங்கள் அடையும் ஆநந்தத்திற் களவில்லை. எண்ணிறந்த ஸாதுக்கள் கூடி யின்புறுதற் கேதுவாகிய இம் மஹோத்ஸவம் யாம் வியக்குந் தரமன்று. யாம் உண்மையாகக் கூறுமிடத்து இந்த மஹோத்ஸவத்தி லுண்டாகிய இன்பம் எங்களுக்கு வேறெதனிடத்தி லுஞ் செனிக்கவில்லை. இனியொன்று சொல்லுகிறோம். குடையானது தன்பால்வந்து வைகினார்க்கு நிழல் தருவதொன்றன்றோ? அப்படியேயன்றோ சிவனாரது குடையும் அடுத்தவர்க்கு ஆதரவு செய்யற்பாலதாகும்? எனவே, அச்சிவனாரது குடைநிழல் மோக்ஷவின்பம் பயப்பதெனவே முடிந்தகருத்து. மலத்தாக்காலாகிய வெப்பத்தினால் வெதும்பினார் சென்று தங்கு நிழலினதுநிலையாகிய ஞானதீபக்குடையை நாம் சென்று நாடிச் சுகந்தேடாமல் வேறெதனையோ நாடிப்போவது? குடை அந்தணனுக்கும், அரையனுக்குமே அங்கமாயுள்ளது.. பிரபல சுருதிப் பிரமாணங்களால் சிவனேபிராஹ்மணன் என்று பெறப்பட்டமையால், அச் சிவபிரானைய வந்தணன் குடையுடையா னாயினன்: எமதருள்வள்ளல் ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தனுமன்றோ குடையினை அங்கமாகவுடைய அந்தணர் தலைவனாயினன்? இப்பெருந் திருவாளனிடத்திலேயே யன்றோ 'முத்து விளையுமாக் கதிர்வெண்குடை யார்த்தது மிசையே' என்னும் பிரமாணம் சிறப்பெய்தியது? அந்தணனாகிய சிவகுமாரன் அந்தணனாயிடுத லதிசயமோ? சிவசூநுவாயிருத்தல் பற்றியேயன்றோ 'வானவர் நாயகர்



மகனார்' என்றுகூறி, 'ஒருபிறப்பு மெய்தாமை யுடையார் தம்மையுலகியல்பி லுபநயன முறைமை யாகு, மிருபிறப்பி னிலைமையினைச் சடங்கு காட்டி'' எனப் பிறந்திறந்தெய்க்கும் பிணத் தெய்வங்கள் போலாது வயங்கும் பெருமையை ஸ்ரீ சேக்கிழார் பெருமான் விதந் தருளினர். சிவபிரானும், அவரதுமக்களுமே அந்தணராகுந் தன்மையால் அவர்களே குடைக்குரியராயினார்கள். ஆகையால், ஸ்ரீஜ்ஞாநதீபக்குடை காழிப்பிரானாருக்குரிய தென்னும் அமைவுடைத்து. குடையுடையானாய சிவன் தனது மகவுக்குங் குடை கொடுத்தருளினமையால், அவர்களே குடைக் குரியார்களென்பது தீர்மானமாயிற்று. பிதாவினது பாக்யமனைத்தும் பிள்ளைக்குரித்து என்பதுமேயன்றோ, சிவனாரது குடையையே காழித்தலைவனது குடையென்று துதிப்பார்க்கு ஆதாரவாயிற்று? இதனால், குடைநிழலைத் தேடிவைகுவார் அண்ணாமலையாரையும், காழிப்பிள்ளையாரையுங் கதிவிழைவுற்றெய்தி இன்பந்துய்ப்பாரெனக் கூறலே அமையும். அண்ணாமலையார் சதுர்வேதங்களாற் றுதிக்கப்பெற்றவரும், பிள்ளையார் ஆநந்தவடிவினராதலுஞ் சைவநூல் வரம்புகண்டார் தீட்டுஞ் சாதனமாமென்க. உண்ணாமுலைத்தாயையே சித்தின்கனமாமென்ப துண்மையுணர்ந்தோர். உண்ணாமுலைத்தாயாதல் பற்றியேயன்றோ திருமுலையை யுண்ணத்தாமல் அத்திருமுலையிற் சுரந்தபாலைப் பொன்வள்ளத்திற் கறந்தூட்டிப் பிள்ளையாரை யுண்ணச்செய்தனர்? எமது காழிப்பிள்ளையார் உண்ணாமுலைத்தாயையே தமது மாதாவாக வுடையாரெனல் இதனாலே நன்குவிளங்கியது. யாம் அண்ணாமலையார்க்கும் உண்ணாமுலையினது பா லுண்டருளிய உடையபிள்ளையார்க்குங்காட்டிய சம்பந்தமும் நிலைபெறுகியது.

இம்மட்டோ: ஞாநமானது தேஜோராசியாயுள்ளது. இது கொண்டே ஞானதீபம் என்று வழங்குவர் மேலோர். அதன்மீது கவிக்குங் குடையே ஞானதீபக்குடை யெனத் துதிக்கும் பெருமை பெற்றோங்கியது. வேதகாரணமாகிய ஞானப் பிழம்பாயுள்ளது சிவம். இவ்வுண்மையையே யன்றோ 'ஞானத்தின் றிருவுருவை நான்மறையின் றனித்துணையை' எனச் சேக்கிழார்பெருமான் விசதப்படுத்திப் பிள்ளையாரது பரதத்துவ நிலையைப் பேசிமுடித்தனர்? வேதங்கள் முழங்கியதும், ஸ்ரீ சேக்கிழார் முழங்கியதும், ஒருபொருளையே யென்றுணராதார்க்கு, அவர்களது பாவங்கொஞ்சம் விலகி வழி

விட்டாலன்றி வேறுகதிகண்டிலம். நான்மறையின் றனித்துணையாகிய ஞானத்தின் றிருவுருவமே ஞானதீபமாகையால், அதன்முடியிற் பொலிந்தோங்குஞ் சிறப்பினதாதல்பற்றியே ஞானதீபக்குடையென்றாயிற்று. இந்த நய முணர்ந்தாலன்றி எமது காழிநாதனுக்குரியது ஞானதீபக்குடை யென்னும் எமதுண்மையினின்று வாழ இடமுண்டாகாது, அண்ணாமலையாரும், ஆளுடைய பிள்ளையாருந் தம்மில் வேறுபடாத அதிஷ்டானமும், அவதாரமு மாவரென்னு முண்மையி லையுகொண்டார், மேல் யாம்காட்டிய 'ஒரு பிறப்பு மெய்தாமை யுடையார்' என்னுஞ் சேக்கிழார் வாக்கைச் சிக்குப்படுத்திச் சிந்தை யழிவர்.

இந்த ஞானதீபக்குடை எழுபத்தைந்து வருஷங்களாக நடைபெற்று வருகின்றது. இது நீடுதழைத்தோங்குமாறு இதனை இப்போது நடத்திவருஞ் சைவப்பிரபு தக்க ஏற்பாடும் செய்திருக்கின்றார். அது நமது தவமேயாமென்க. இத்தகைய சிவபுண்ணியங்களே அவ ரென்றும் புரிந்து சிவனருளைப் பெற்றுவாழ்வாராக.

நல். கண்ணப்பமுதலியார்,
வேதாகமோக்த சைவசித்தாந்த சபை,
திருவல்லிக்கேணி.

---

## சிவபெருமானே வழிபாட்டுக்குத் தக்க பலனைக்கொடுப்பர்.

(அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள்)

நால்வகை யோனியுள் ஒரு யோனிவாய்ப்பட்டுப் பிறப்பனவெல்லாம் சீவ வர்க்கம். அங்ஙனம் யோனிவாய்ப்பட்டுப் பிறத்தலில்லாதது பதிப்பொருள். இதுவே பதிக்கும் சீவனுக்குந் தம்முள் வேற்றுமையாம். ஏனைத் தெய்வமெல்லாம் யோனிவாய்ப்பட்டுப் பிறத்தலேயன்றி, மேல் வினையுஞ் செய்தல் கேட்கப்படுதலால் சுதந்திர அறிவில்லாதனவேயாம். அவையொன்று மில்லாத சுதந்திர அறிவுடையவர் சிவபெருமானேயாம்.

பிறப்பது மிறப்பதும் பெயருஞ் செய்கையும்
மறப்பது நினைப்பதும் வடிவம் யாவையுந்



துறப்பது மின்மையும் பிறவுந் துற்கலாச்
சிறப்புடை யரனடி சென்னி சேர்த்துவாம்.
(கந்தபுராணம்—கடவுள்வாழ்த்து ௩.)

எவ்வெவ் வடிவாய், எவ்வெவ் வண்ணமாய், எவ்வெப் பெயர்கொண்டு, எவ்வெத் தெய்வத்தை, எவ்வெவர் வழிபடினும்-அவ்வவ் வடிவாய், அவ்வவ்வண்ணமாய், அவ்வப்பெயர்கொண்டு, அவ்வத் தெய்வத்தைத் தமது சத்தியால் அதிட்டித்து நின்று அவ்வவ் வழிபாடு கண்டு அதனை அங்கீகரித்து அனுக்கிரகிப்பவர் சிவபிரானே. ஏனைத் தெய்வங்கள் சுதந்திர அறிவின்மையால் தாமே பலன் கொடுக்க மாட்டா.

யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்மற் றத்தெய் வங்கள்
வேதனைப் படுமி றக்கும் பிறக்குமேல் வினையுஞ் செய்யு
மாதலா னிவையி லாதா னறிந்தருள் புரிவ னன்றே.
(சித்தியார் ௨—௨—௨௫.)

இதனால் அநாதி முத்த சித்துருவாகிய பரமபதி சிவனே என்பது துணியப்படும். பசுக்கள் பிராமணர் தந்தை தாய் முதலியவர்களை இம்மையிலே வழிபட்டோருக்கு, அஃதறிந்து அதற்கேற்ற பலனைத் தருபவர் கடவுளே என்பது எல்லாருக்குஞ் சம்மதமான முடிபாம். அதுபோல எத் தெய்வத்தை வழிபடினும், அவ் வழிபாட்டிற்குச் சிவபிரானே பலன் தருவர். அங்ஙனமாயின் பிற தெய்வத்தை வழிபட்டாருக்கு அவ்வத் தெய்வமே எதிர்தோன்றி நின்று பலனைக் கொடுத்தது என நூல்கள் கூறுதலால், அவ்வத் தெய்வங்களும் அதற்கு வல்லுநர் எனக் கருதவருமேயெனின்: இராசாவின் ஆஞ்ஞையே மந்திரி முதலாயினோரிடத்து நின்று பிறருக்குப் பலன் கொடுக்குமாறுபோல சிவபிரானே தமது ஆஞ்ஞையைத் தம் ஏவல்வழி நிற்கும் அவ்வத் தேவரிடம் வைத்து, அத் தேவரிடமாக நின்று பலன் தந்தருளுவர் என்க. அங்ஙனமின்றித் தாமே வினைக்கட்பட்டுநிற்கும் ஏனைத் தேவர்கள் சுதந்திரமாய்ப் பிறர்க்குப் பயன் கொடுத்தலில்லை என்க. (சித்தியார் ௨—௨—௨௬.)

இதனால் ஏனைத் தெய்வங்களைக் குறித்துச் செய்யும் வழிபாடுகளையுஞ் சிவபெருமானே ஏற்றுப் பலன் தருவரென்பது பெறப்

186923

படும். ஆதலால், சிவபெருமானது திருவடிகளை வழிபடுவதே அறமாம். (சித்தியார் உ—உ—உஎ.)

எவ்வெவர் தன்மையேனும் யாவரே யெனினும் போற்றி
னவ்வவ ரிடமாக் கொண்டே யவர்க்கரு டருவாய் போற்றி!
(கந்தபுராண.—கந்தவிரத—சுரு) எனவும்,

யாதொரு பொருளை யாவ ரிறைஞ்சினு மதுபோய் முக்க
ணாதியை யடையு மம்மா வங்கது போலத் தொல்லை
வேதம துரைக்க நின்ற வியன்புக ழனைத்து மேலா
நாதனை யணுகு மெல்லா நதிகளும் கடல்சென் றென்ன.
(உபதேசப்படலம்—கஎ.) எனவும்

வருவனவற்றானு மறிக.

——

# ஆலயப் பிரவேசம் அவசியமா?

(சிவசூரியன்.)

இன்று எத் திசையினும், எப் பத்திரிகையினும் ஆலயப் பிரவேசப் பிரச்னையாகவே யிருக்கின்றன. பலர் தம் அலுவல்களை யெல்லாம் விட்டுவிட்டு, ஆலயப்பிரவேசம் செய்ய என்ன ஆதாரங்களிருக்கின்றன; ஆலயப்பிரவேசத்தைத் தடுக்க என்ன ஆதாரங்களிருக்கின்றன என்று ஆராய்ச்சி செய்யக் கிளம்பிவிட்டார்கள். இதற்குக் காரணம் திரு. கந்தியாரின் கூற்றே.

திரு. காந்தியார் ஒரு காலத்தில், தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களை இழிவாக நடத்துகின்றார்கள் என்று ஏதோ சத்தியாக்கிரகம் ஆரம்பித்து பயனில் செயலாக முடிந்தது. பின், இந்தியாவில் சட்ட மறுப்பு என்ற பெயரால் தன் சகாக்களுடன் சிறை புகுந்தார். தொட்டது தொண்ணூற்றிலும் தோல்வியடைந்த திரு. காந்தியார் சிறையிலிருந்துகொண்டு, 'தீண்டப்படாதவர்களைக் கோவிலில் விட வேண்டும்' என்று அறிக்கைமேல் அறிக்கை வெளியிடுகின்றார்.

திரு. காந்தியார் தம்மை ஒரு இந்தியனென்றும், ஆஸ்திகனென்றும், இந்துமத புராண இதிகாசங்களை நம்புகிறவனென்றும், இந்துமத தீர்க்கதரிசிகளான சங்கரர், இராமாநுஜர், நாயன்மார்கள், ஆழ்வாராதிகளுடைய கொள்கைகளைப் பின்பற்றுகிறவனென்றும் கூறிக்கொள்ளுகின்றார்.



ஆனால், தீண்டாதாரைக் கோவிலுக்குள் விடவேண்டுமென்று இவருக்குத் தோன்றிய எண்ணம், ஏன் இவர் போற்றும் இந்துமத தீர்க்கதரிசிகளுக்குத் தோன்றவில்லை! அவர்களுக்குத் தோன்றாத விஷயங்கள் இவருக்கு எங்ஙனம் தோன்றியவோ? மக்களுக்குள் தீண்டாதாரைக் கடவுள் தனியாகப் படைக்கவில்லை. மக்களில் கொலை புலையாதிய இழிசெயல்களைக்கொண்டவர்களைத் தீண்டக் கூடாது என்று ஒதுக்கிவைத்துவிட்டார்கள். இது பொருத்தந்தானே. உதாரணமாகக் கடவுள் காங்கிரஸ்வாதி என்று ஒரு தனிமனிதனைப் படைத்தாரா? இல்லையே! அம் மனிதன் காங்கிரஸ் இயக்கம் தனக்குப் பிடித்த பின்னரன்றோ அதில் சேர்ந்து காங்கிரஸ்வாதி எனப் பட்டான். இஃது அறியாது ஒழுக்கத்திற் குறைந்த இழிஜனங்களை 'ஹரிஜனங்க' ளென்று கூறிப் புனிதத் திருக்கோவில்களில் புக விடுவதென்பது முறையா?

திருப்பாணாழ்வார், நந்தனார் முதலியோர் ஆண்டவன் சந்நிதியில் செல்லவில்லையா? என்று கடாவுகின்றனர். திருப்பாணாழ்வார், நந்தனார்போன்று இருந்தால் தடையேற்படுமா? இவர்கள் பக்தி மேலீட்டினாலா கோவில்நுழைவு வேண்டுகின்றனர்? இல்லையே! தினம் குடிப்பது ஒரு மிடாவும், கடிப்பது ஓர் கிடாவுமாக விருந்தால் எங்ஙனம் கோவில் திறக்கப்படும்? திறந்து விடப்பட்டு மக்களுடன் பழகினால்தான் நாகரிகமாக இருக்க விரும்புவார்கள் என்கின்றார் சிலர். முன்னதாகவே நாகரிகமாக இருக்கக் கூடாதா? தீண்டப்படாத இழிஜனங்களை ஹரிஜனங்களென்று திரு. காந்தியார் அழைக்கின்றது, விடப்பாம்பை நல்லபாம்பு என்பதுபோலும்.

இழிஜனங்களுக்குக் கோவிலைத் திறந்துவிட வேண்டுமாம். இன்றேல், பட்டினிகிடந்து உயிர் விடுவாராம். என்னே! விபரீதம். எங்கள் வீட்டில் ஒரு குழந்தை இருக்கின்றது. அது, "தனக்கு வேண்டியதைக் கொடுக்காவிட்டால், நான் சோறு தின்ன மாட்டேன் கிணற்றிலே விழுந்திடுவேன்." என்பதுபோன்ற செய்கையாகவல்லவோ திரு. காந்தியாரின் செய்கையுமிருக்கின்றது.

கொலை புலையாதிய குலமுறையெனக் கொண்டு திரியும் இழிஜனங்களுக்குத் திருக்கோவிற் பிரவேசம் கூடாதென்பதே செவ்விய முறையாகும்.

——

உ

# வைத்தியத் துறை.

(திரு. எஸ். ஆர். அத்தியப்பன் அவர்கள்.)

பல துறைகளிலும் ஆராய்ந்து பிறர் உதவிபாராமல் இருக்கும் போதுதான் ஒருதேசம் முன்னேற்றமடைந்ததாகக் கருதப்படும். மக்கள் நோயின்றி நீண்டநாள் வாழ்வதற்கு வைத்தியத் துறையே மிகுதுணை. உடல்நலமின்றேல் ஒருகாரியத்தையும் இயற்றவொண்ணாது. ஒருவருக்கு நோய்வரின், 'ஏன் அந்நோய் வந்தது? இயற்கைக்கு மாறாக நடந்தது என்?" என நன்கு ஆராய்ந்து பார்க்கவேண்டும். நோய் வந்தபின், ரூபா 50, 100, 500 செலவு செய்து சுகமடைவதைக் காட்டிலும், நோய்வராமல் பாதுகாத்துக்கொள்வதே அறிவுடைமை.

வைத்தியசாலைகளைத் தர்மமாக வைத்துப் புண்ணியம் சம்பாதித்துக் கொள்வதைக் காட்டிலும் கிராமங்கள்தோறும், நகரங்கள்தோறும் சென்று நோய் வரும் வரலாற்றையும், அதைத் தடுக்கும் வழியையும் மக்களுக்கு விளக்கினால் பலநன்மைகள் உண்டு. மருந்தினால் உண்டாகும் செலவும், சிரமமும் குறையும். மக்களும் அறிவு பெற்றுத் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள அறிவார்கள். பிற்கால வாழ்க்கை வலிவு பெறும். மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் பூதத்துவத்தை உணர்ந்து இயற்கை வழியில் செல்லவேண்டும். ஒருபக்கம் மக்களைப் பசிப்பிணி வாட்டுகின்றது. பசியால் பலபிணிகளும் வந்து விடுகின்றன. பசியொழியும்போது மற்றபிணிகளும் ஒழிந்து விடும். இதற்கு நம் நாட்டவர் வழிதேடவேண்டும்.

நம் பண்டைய வைத்திய நூல்கள் பலவுள. அரசாங்க வைத்தியம் பரவியிருப்பதால் நாட்டு வைத்தியம் செழிக்க வகையில்லாமலிருக்கின்றது. நாட்டு வைத்தியத்தைச் சிறப்பிக்கும்படி வேண்டுகின்றோம்.

'இந்திய மூலிகை' என்ற தலைப்பின்கீழ் எழுதிய எனதுகட்டுரைகளை வெளியிட்ட 'சிவநேசன்' ஆசிரியரவர்களுக்கு நன்றியுரியதாகுக. அவைகளைப் புத்தகமாக வெளியிடின் நன்மைபயக்கும்.

---

உ

# திருநீறணிவதேன்?

கண்டாச்சிபுரம், திரு. வை. ச. இராமலிங்கமுதலியாரவர்கள்.

திருவளர்ந் தோங்குமிப் பரதகண்டத்தில், சிவனடியே சிந்திக்கும் பெருவாழ்வுடைய சைவமக்களாகிய நாம், மங்களத்தை நல்குஞ் சிவசின்னமாகிய விபூதி உருத்திராக்கமணிதல் மிக்க அவசியமென்பதொருதலை. 'தீண்டாமை விலக்கல் தேசத்தின் நன்மை," 'மதக்குறியணிதல் மதியிலோர் செய்கை" என வாய்மதம் பேசி, "பரமேது வினைசெயும் பயனேது பதியேது பசுவேது பாசமேது" என்ற கொள்கை வாய்ப்பட்டு நாஸ்திக இயக்கம் பரவுமிந்நாளில், சிலர் திருநீறணிவதில் மிக்க அசட்டையும், அருவையையும் காட்டி வருகின்றனர். காரணம் சமயஞானம் போதிக்கப் பெறாமையே. அத்தி பூத்ததுபோல் ஆங்காங்கு சில மெய்யன்பர்கள் சமயப் பிரசாரம் செய்து வருகின்றார்கள். பெரும்பாலோர் இன்னும் தங்கள் கருத்தை இப்பணி செய்தலிற் பதிக்கவில்லை. நமது நாட்டில் 'திருநீறணிதல்' எக்காலத்தில் ஏற்பட்டதென்று கணிக்கமுடியாத பண்டைய வழக்கமாயிருந்துவருகிறது. இதனை மேற்கொண்டொழுகுவோர், வைதிக சம்பந்தமுள்ள சான்றோரனைவருமே. சைவர்களும் ஸ்மார்த்தர்களும் இன்றும் விபூதி உருத்திராக்க தாரணமுடையராயிருத்தல் வெளிப்படை. நமது சைவசமயாசாரியர்களருளிய "மந்திரமாவது நீறு" என்பதாதிய தேவாராதி திருப்பாசுரங்கள் திருநீற்றின் பெருமையைப் பெரிதும் விளக்குகின்றன. இத்துணைப் பெருமைவாய்ந்து பழமையாய் நிலைபெற்றிருக்கும் இச் சிஷ்டாசாரமானது மேல்நாட்டு நாகரீக வெள்ளத்தால் முற்று மடித்துக்கொண்டுபோய்விடப் படவில்லை. இமசேது பரியந்தம் பலகோடி இந்துமக்களால் இன்றளவும் போற்றப்பட்டு விளங்கிக் கொண்டிருக்கிறது. சைவசமயத்தைச் சார்ந்த ஒவ்வொருவரும் தன்மதிப்புடையவராயின் தான் எந்நிலையில் நின்றாலும் இவ்விபூதியணிதலைப் பண்டைய ஆசாரமென்னுங் காரணம்கொண்டே மேற்கொள்ளுங் கடப்பாடுடையவரா யிருக்கவேண்டும். ஒளவைப் பிராட்டியார் 'நீறில்லா நெற்றிபாழ்' என்று வெகுசுருக்கமாகவும், தெளிவாகவும் கூறி

யிருப்பதே நீதியாகும். வேதாகமாதிகளும் விபூதி யணிதலை மிகவற் புறுத்துகின்றன.

திருநீற்றுக்கு, 'திருநீறே பற்பம் பொடியொடு விபூதி காப்பாம், புண்ணிய சாந்தஞ் சாணி' என்று நிகண்டு நூலார் கூறியபடி, விபூதி, பசுமம், பசிதம், பொடி, சாரம், இரக்ஷை எனப் பல்வேறு பெயர்கள் உண்டு. பிறவிநோயைத் தீர்க்கும் மணிமந்திர ஔடதங்களில் விபூதியே ஔடதம். சமஸ்த பாவங்களையும் போக்கி நீறுக்குந் தன்மையால் திருநீறென்றும்—பஸ்பமென்றும், ஐஸ்வரியத்தைக் கொடுக்குங் காரணத்தால் பூதியென்றும், பிரகாசித்தலால் பசிதமென்றும், ஆபத்தைப் போக்குதலால் க்ஷாரம்என்றும், பூதப் பிரேத பிசாச பிரஹ்மராக்ஷஸ அபஸ்மார பவ பீதிகளினின்றும் காத்தலால் இரக்ஷை அல்லது காப்பு என்றும் திருநாமங்கள் வழங்குகின்றன. விபூதி மேலான ஐஸ்வரியம், 'ஐச்வர்ய கார்ணத்பூதி' என்னும் வேதவாக்கியத்திற் கிணங்கத் தன்னை யணிந்தார்க்கு மேலாம் மோக்ஷ செல்வத்தை யளித்தலால் விபூதி என்றும், வி — சிவபெருமான், பூ — பாவனை, தி — அடைதல், எனக்கொண்டு சிவத்துவ பாவனையை விளக்கும் இயல்புடைய தென்றும் அறிஞர் பொருள் கூறுவர். இதனை,

நீட லுறுந்தீ வினையனைத்தும் நீற்றி விடலால் நீறென்றும்
வீடில் வெறுக்கை தருதலினால் விபூதி யென்று முயிர்தோறும்
கூடுமலமா சினைக் கழுவுங் குணத்தாற் சார மென்றுமட
மோட வளர்சோ தியைத்தரலால் பசித மென்று முரைப்பாரால்.

என்ற ஆன்றோர் வாக்கும் வலியுறுத்தும்.

இறைவர் திருவெண்ணீற்றை அகங்கார மமகாரமாகிய அகப்பற்றும் புறப்பற்று மொழியுமாறு, விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூவகை யான்மாக்களும் தரிக்கும்படியமைத்தனர் என நூல்கள் கூறாநிற்கும். திருநந்திதேவர், திருமால், பிரமன், இந்திரன் முதலாகவுள்ள பல தேவர்களும், பராசரன், வசிட்டன், வியாதன், கௌதமன் முதலான முனிபுங்கவர்களும், விபூதி யணிதலா லளவிறந்த நன்மைகளையும் மோக்ஷத்தையும் பெற்றனரென்றால்,விபூதியைக் காட்டிலும் அரியபெரிய பொருள் உலகத்தில் வேறெதுவுமில்லை. இதற்கு,



தீர்த்தமுள திற்பெரிய தீர்த்தமஃ தில்லை
ஏத்தரிய செல்வமு ளிதிற்பெரிய தில்லை
பேர்த்துரை மருந்தினு ளிதிற்பெரிய தில்லை
நீத்தலுறு பண்டிதரு ணீற்றினிக ரில்லை.

என்னும் செய்யு ளொன்றே போதிய சான்றாயமையும். இத்தகைய மேம்பாட்டினையுடைய திருநீற்றைப் பசுவின் சாணத்தைக் கொண்டு ஆக்கும் முறையாதோவெனில், முன்னைப்பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளாகிய சிவபெருமான், சர்வ சங்காரகாலத்தில் தமது கனற் கண்ணாற் சகலபொருள்களையுஞ் சாம்பராக்கி, அச்சாம்பரைத் தமது திருமேனியிலிட்டு, பின் உலகம் யாவையுந் தோற்றுவித்து, தமது திருக்கரத்தால் திருமேனியிலுள்ள சாம்பலாகிய விபூதியை வழித்தெறிந்தார். அதுதன் இடபத்தின் மேல்விழ, அது மகிழ்ச்சியோடதனை யுண்டு, தன் வீரியத்தைப் பசுக்களிடம் விட்டது. ஆகையால், அப்பசுக்களின் கோமயம் திருநீற்றுக்கு மூலமாகச் சிறந்துவிளங்கிற்று. இதனை,

சான்ற நூல்புகல் சர்வசங் காரகா லத்திற்
றோன்றும் யாவுந்தன் நுதல்விழி யங்கியாற் றொலைத்து
நான்ற வார்குழைப் பாகனம் மயானத்து நடித்தா
னன்ற நீறெலாந் தோய்ந்திட மேனியி லவற்றை;

திருக்க ரத்தினால் வழித்தெறிந் தனன்றிகழ் விடைமுன்
விருப்பி னாலவை யயின்றந்த விடைதன்வீ ரியத்தை
யருப்ப மீக்கொளப் பசுக்கள்பால் விட்டதப் பசுக்கள்
பெருக்கு கோமயம் விபூதிக்கு விசேடம்பே சினவால்.

என்னும் ஆன்றோ ரமுதவாக்கா லுய்த்துணர்க. திருநீறு விளைவிக்கும் விதத்தை யுற்றுப்பார்க்கில், பெரிதும் வியக்கத்தக்க உண்மைகள் சில புலனாகும். பசுவின் மலமாகிய சாணத்தை மந்திரபூர்வமாக எற்று உலர்த்தி நெருப்பிலிட்டு நீற்ற, உயர் வகைத் திருநீறுண்டாகின்றது. பசுவென்னும் பெயர் ஆன்மாவையும், மலம் என்னும் பெயர் அதை அநாதியே பந்தித்துள்ள ஆணவ கன்ம மாயை யென்னும் மும்மலத்தையுங் குறிப்பன. இனி, ஆன்மாவின் மலமானது, ஞானாசாரிய னருட்கட்சுடரால் வலியிழந்தொழியு மென்பதும், ஒழியவே ஆன்மா சுத்தமடைந்து சிவகுணம் பதியப்பெற்று ஆனந்த

மயமாய்ப் பிரகாசிக்கு மென்பதும் சிவஞான சாத்திரங்களில் செம்மையாய் விளக்கப்பட்டிருத்தல் உய்த்துணர்க. விபூதி தாரண முக்குறிகள் மும்மல நாசத்தைக் குறிக்குமென்னலாம். திருநீற்றின் பெருமையை,

“பஸ்ம தாரணு தேவமுக்திர் பவதி
சிவசாயுஜ்ய மவாப் நோதி
நஸபு நரா வர்த்ததே
நஸபு நரா வர்த்ததே’

என்று ஆரியவேதமும் புகழ்ந்து கூறுகின்றது. கூன்பாண்டியனது கூனை நிமிர்த்ததும், சுரத்தை நீக்கிச் சுகத்தை நல்கியதும் இத் திருநீற்றின் புகலற்கரிய மகிமையே. இதனால், பஸ்மதாரணமே பாபக்ஷயஹேது என்பதூஉம், மோக்ஷபல மென்பதூஉம் நன்கு நிரூபிக்கப்பட்டன.

‘திக் பஸ்ம ரஹிதம் பாலம்’ விபூதி இல்லாத நெற்றியைச் சுடு என்று, பிருகஜ்ஜாபாலோபநிடதமும், “பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு” என்று திராவிட வேதமும் அறுதியிட்டுக் கூறுமாற்றால், விபூதியணிவது மிக்க அவசிய மென்பது பெறப்படுகின்றது. நமது மணிவாசகப் பெருமானார்,

‘திணிநிலம் பிளந்துங் காணுச் சேவடி பரவி வெண்ணீ
றணிகிலா தவரைக் கண்டா லம்மநா மஞ்சு மாறே’

என்று கூறுகின்றனர். ‘முத்தியே யன்றிப் புத்தியும் வெஃகின் முகிழ்க்குமாற் சைவவான் பூதி’ என்று தணிகைப் புராணமுடையாரும் சாற்றுகின்றனர். பஸ்மதாரணம் சகலவேத படிதமென்றும், பஸ்மதாரணம் ஸமஸ்த கர்மங்களின் பலனையளிப்பதென்றும், பஸ்மதாரணம் தேவோபாசனைக்கு அந்தரங்க சாதனமென்றும், பஸ்மதாரணம் நித்தியாக்ஷாரூபமென்றும், பஸ்மதாரணம் புருஷார்த்த ஹேதுவென்றும், பஸ்மம் சித்தசுத்திக்கு மூலமென்றும், பஸ்மம் சிவப்ரசாதத்துக்கு முக்கியமென்றும், பஸ்மம் சாக்ஷாத் சிவரூபமென்றும், பஸ்மம் நித்யமுக்தி யெனப்படும் நிரதிசயானந்தத்திற்குக் காரணமென்றும் பல வேதவாக்கியங்கள் முழங்குகின்றன.

‘பகைபிணி மண்ணைபன் மந்தி ரத்தினு
மிகையறன் கடையுள வெருட்சி பித்திடர்



வகையனைத் தையுமற மாற்றி யாவர்க்கும்
தகைநல மளிப்பது தவள நீற்றரோ”

என்று கச்சியப்ப சுவாமிகளும் விபூதியின் நலத்தை வியந்து கூறியிருக்கின்றனர். விபூதி யணிதலால் வீட்டின்பஞ் சித்திக்குமென்பதை நமது திருமூலநாயனார் தமது திருமந்திரத்தில்,

‘கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வீரே யாமாகிற்
றங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே.”

என்று கூறியிருப்பது நன்கு நோக்கத்தக்கது. வைத்திய சாஸ்திரப்படி இத்திருநீறானது, விஷசத்துக்களை நீக்கி, விஷக்கிருமிகளைப் போக்கி, ரோகங்களை விலக்கி மனிதனைக் காக்கின்றது. ஜலதோஷ முதலிய சிரநோய்களைக் கண்டிக்கின்றது. அவரைச்செடிகளில் புழு பூச்சி முதலிய விஷக்கிருமிகள் அணுகவொட்டாமல் சாம்பற்போடுவதும், துவரை முதலியவைகளில் புழுபூச்சி விழாமல் சாம்பலை மேலே தூவுவதும் கொண்டு விபூதியிலுள்ள சத்தை யூகித்துணர்க. பிறமதத்தினரும் நம் புனிதவான் பூதியைப்போற்றுகின்றனர். மகம்மதியர்கள் தங்கள் பள்ளிவாசலில் சர்க்கரை கொண்டுவந்து பாத்திஹா செய்கிறவர்கட்கு, குருக்கள் ‘நாறுஷா’ என்னும்விபூதியைத் தருகின்றனர். அவர்களதை நெற்றியிலிட்டு வாயிலும் போட்டுக் கொள்கின்றனர். இன்றைக்கும் இது எல்லாப் பள்ளிவாசல்களிலும் நடைபெறுகின்றது. கிறித்துவர்களும் விபூதித்திருவிழா ஏற்படுத்திக் கொண்டாடுகின்றனர். அது, (Ash wednes day) பூதியணியும் புதவாரம் என்று ஆங்கிலத்திற் கூறப்படுகின்றது. விபூதியணிதலால் இம்மையே உடலுக்காய நலங்களும் பலகிடைக்கும் என்று சுருதிகள் கூறுகின்றன. திருநீறணிதல் தூய்மைநாட்டத்திற்கறிகுறி என்பது நம்மனோர்களின் மனக்கிடக்கை. பூதியணிதலால் சகலபாபநாசமும், சகலமங்களபிராப்தியும் உண்டாகின்றனவென்பது நூல்களின் றுணிபு. திருநீறணிதலின் சிறப்பைச் சிவஞானச் செல்வராகிய ஸ்ரீசிதம்பரசுவாமிகள்,

‘ஆதி பகவன் ஞானவடி வழலிற் பூத்து நித்தியமாய்
அணிந்தோர் தமக்கு வசிகரமா யருந்தி னோர்கட் காமுதாய்

நீதி யணியும் பசுமலத்தை நீக்கு மொருநற் குறிகாட்டி
நிகழ்பே ரின்பக் கடலூட்டி நின்ற புகழ்வெண் டிருநீறே"

என்ற செய்யுளடிகளில் நன்கு விளக்கியுள்ளனர்.

ஆதலால், தம்மையுந் தலைவனையும் மறந்துழலும் சீவர்கட்கு உண்மைப் பொருளினியல்பையும், உயிரடையவேண்டியபேற்றின் தன்மையையும், அதற்குரியசாதன வியல்பையும் எளிதில் அடிக்கடி நினைப்பூட்டச் செய்து, இன்ப முத்தியளிக்கவல்ல இச் சிவசின்னமாகிய திருநீற்றைப் பக்தி சிரத்தையோடு சுருதிகளிற் கூறியவண்ணம் விதிமுறையணிந்து கொள்ளுதல் ஒவ்வொரு சைவமக்களின்கடமையாகுமென்பதை மிக்கவணக்கமாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சைவசமய சம்பன்னர்களே! சிவம் பெருக்குந் திருநீற்றைத் தினந்தோறும் தரித்து அருள்பெறுவீர்களாக. திருநீறணிவதேன்? என்னும் வினாவிற்குச்'சீவன் சிவனாதற்பொருட்டே'என்பது விடையாகலாம்.

---

# பண்டைத் தமிழ் நாடு.

கோநகர் திருவாளர் சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார்.

திங்கட்குழவி தங்கிய சடையனும், அடியவர்க் கருளும் வடிவேற் குமரனும், பெருங்கடல் பருகிய இருங்குட முனிவனும், நக்கீரர் முதலாம் நல்லிசை மிகுபெருஞ் சங்கப்புலவருந் தழைத்தினிதிருந்து ஆராய்ந்த செந்தமிழ் மொழியின் தோற்றம், பாகுபாடு; பெருமை முதலியனவற்றை முன்னர் ஆராய்ந்தோம். இனி, நம் தமிழ்நாடு பண்டைக் காலத்திருந்த நிலையையும், அக்காலத்திருந்த அரசர், புலவர், புரவலர், பெண்கள் முதலியவர்களின் தன்மையையும் இவ் வியாசத்தில் ஆராய்வோம்.

கிழக்கே கீழ்கடலையும், தெற்கே கன்னியாகுமரியையும், மேற்கே குடகநாட்டையும், வடக்கே திருவேங்கடத்தையும் எல்லையாக வுடைய நிலமே தமிழ்நாடென்றும், இதன்கண் வாழ்ந்துவரும் மக்களே தமிழரென்றும் பெயர் பெறுவர். இத் தமிழ்நாட்டை முதலில் சேரர், சோழர்,பாண்டியர் என்ற அரசர் மூவரும், கி. பி. 5-வது நூற்றாண்டுக்குப் பின் பல்லவ அரசர்களும், கி. பி. 9-வது நூற்றாண்டுக்குப் பின் சோழ அரசர்களும், கி. பி. 1250 முதல் 1280 வரையில் பாண்டிய அரசர்களும், பின் விஜயநகரத் தரசராகிய கிருட்டிணதேவராயரும் ஆண்டுவந்திருக்கின்றனர். அப்பால் முகம்மதியர் தமிழ்நாட்டைக் கைப்பற்றி கி. பி. 1600 முதல்



1750 வரையிலும் ஆண்டனர். பின்னரே முகம்மதியரிடமிருந்து ஆங்கிலேயர் தமிழ்நாட்டைக் கைப்பற்றி யாண்டு வருகின்றனர். இதுவே ஆரம்ப முதல் தமிழ்நாட்டை ஆண்டுவந்த அரசர்களின் விவரமாகும்.

அக்காலத்துத் தமிழ்நாட்டுநிலத்தை ஐவகையாகப் பிரித்தனர். அவை, முல்லை, குறிஞ்சி, நெய்தல், மருதம், பாலை என்பவைகளாம். காடும் அதைச் சார்ந்த இடமும் முல்லை யென்றும், மலையும் அதைச் சார்ந்த இடமும் குறிஞ்சி என்றும், சமுத்திரமும் அதைச்சார்ந்த இடமும் நெய்தல் என்றும், வயலும் அதைச்சார்ந்த இடமும் மருதம் என்றும், மணற்பாங்காகிய இடம் பாலையென்றும் பெயர்பெறும். இவ்வாறு எத்தனையோ ஆயிரம் வருடங்கட்கு முன்னரேயே நம் முன்னோர்கள் நிலத்தை ஐந்து வகையாகப் பிரித்திருக்கிறார்கள். இதைப் பின்பற்றியே, தற்காலப் பூகோள ஆராய்ச்சியாளரும், மலைப் பிரதேசம் (Mountain Forest) பீடபூமிப் பிரதேசம் (Plateau) சமவெளிப் பிரதேசம் (Plain) கடற்கரைப் பிரதேசம் (Sea Coast) பாலைவனப்பிரதேசம் (Desert) எனப் பிரித்திருக்கின்றனர்.

நம் நாடு, சேர சோழ பாண்டியர் என்ற தமிழ்வேந்தர் மூவரால் ஆளப்பட்டதால், சேரன் ஆண்ட பகுதி சேரநாடென்றும், சோழன் ஆண்ட பகுதி சோழநாடென்றும், பாண்டியன் ஆண்ட பகுதி பாண்டியநாடென்றும் பெயர் பெற்றது. இவ் வரசர்களெல்லாம் தமிழ்த் தாயிடத்தில் மிக்க அன்பு கொண்டவர்களாய், ஆரியம்போ லுலகவழக்கழிந் தழகு சிதையாத செந்தமிழ்ப் புலவர்பெருமக்களிடத்து மிகுந்த பயபக்தி விசுவாசத்துடன் இருந்து வந்தார்கள். புலவராற் பாடப்பெறுவதையே பெருஞ்செல்வமாகப் பேணினர். இதனை, அரசனொருவன் வஞ்சினங்கூறுமிடத்து "இன்ன காரியத்தை யான் செய்யேனாயின், புலவர் பாடாது வரைகவென்னிலவரை" என்று கூறுகின்றான். இதனால், அக்காலத்திற் புலவர்பாடும் புகழில்லாதவர் அற்பராகக் கருதப்படுவா ரென்பது போதருகின்றது. இவ்வாறு அரசர்கள் புலவர்களை நன்கு மதித்து நடந்ததற்குக் காரணம், அவர்கள் மிகுந்த கல்வியறிவு பெற்றிருந்தமையேயாம். அவ்வாறின்றி பெரிய சரவணக் கவிராயர் கூறிய,

"வாருநீர் யாரென்ன வித்துவா னென்னலு மதிமோசம் வந்ததென்றே
வாய்குழறி மெய்யெலா மிகநடுக் குற்றுநீர் வந்தகா ரியமேதெனச்
சீருலா வியகாம தேனுவே தாருவே சிந்தா மணிக்கு நிகர்வோய்
செப்புவச னத்தரிச் சந்த்ரனே யெனலுஞ் சினந்திருக ணுஞ்சிவந்தே
யாரைநீ மாடுகல் மரமென்று சொன்னது மலாலரிச் சந்த்ரனென்றே

யடாதசொல்சொல்லினையார்க்கடிமையாகினேனூர்கையிற்பெண்டுவிற்றேன்
தீருமோவிந்தவசையென்றுரைசெய்வெருகோடிதீயரைப்பாடிநொந்தேன்
திருமன்று ணடுநின்று நடமொன்று புரிகின்ற தென்றில்லை நடராஜனே."

என்றபாட்டுக்கு இலக்கியராக முற்காலத்தரசர்கள் இருந்திருப்பார்களாயின், புலவர் தம் பெருமை இதுகாறும் ஓங்கிநிற்குமென்பது திண்ணம். பிற்காலத்தில், அவிச்சுவையல்லது கவிச்சுவை யறியா மாக்கள் நிறைந்திருந்ததினாலேயே, பண்டைப் புலவர் பாடித்திரட்டிவைத்துள்ள நூல்கள் பல நமக்குக் கிடைக்காதொளிந்தன. முற்காலத் தரசர்கள் புலவர்களை நன்கு மதித் தாதரித்து வந்ததனாலேயே, அவர்கள் புறநானூறு, அகநானூறு, பத்துப்பாட்டு ,ஐங்குறுநூறு, சிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய நூல்களைச் செய்யவும், அதனால் அன்னாரின் பெருமைகளையும், நம் நாட்டு முற்கால நாகரீகங்களையும் ஒரு சிறிது அறியவும் கிடக்கின்றது.

பண்டைக்கால அரசர்கள் புலவரிடத்து வைத்திருந்த மதிப்பு அளவிடற் கரியதாகும் என்பதைக் கீழ்வருவனவற்றால் அறியலாம். சோழன் செங்கணான் என்பான், சேரமான் கணைக்கா லிரும்பொறையுடன் போர் செய்து, அவனைச் சிறைசெய்தகாலத்து, பொய்கையார் என்னும் புலவர் பெருமான் "களவழி நாற்பது" என்னும் நூலைப் பாடி, சேரனை விடுவித்தார். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனென்பான், மலையமான் திருமுடிக்காரியின்மீது கொண்டிருந்த பகைமை காரணமாக, அவன் மக்களை யானை யிடரும்படி செய்தகாலத்து, கோவூர்க் கிழார் என்னும் புலவர் பெருமானார்,

நீயே புறவி னல்ல லன்றியும், பிறவும்
பலவின் விடுத்தோன் மருகனை யிவரே
புலனுழு துண்மார் புன்க ணஞ்சித்
தமதுபகுத் துண்ணுந் தண்ணிழல் வாழ்நர்
களிறுகண் டழூஉ மழாஅன் மறந்த
புன்றலைச் சிறார்மன்று மருண்டு நோக்கி
விருந்திற் புன்க ணோவுடையர்
கேட்டனை யாயினீ வேட்டது செய்ம்மே.

இதன் பொருள்:— "நீதான், புறவினல்லலன்றியும், பிறவும் வந்த துன்பம் பலவற்றையுந் தீர்த்த சோழனுடைய மரபிலுள்ளாய். இவர் தாம் அறிவா னுழுதுண்ணுங் கற்றோரது வறுமையை யஞ்சி, தம்முடைய பொருளைப் பகுத்துண்ணுங் குளிர்ந்த நிழலையுடையராய் வாழ்வாரது மரபினுள்ளார். இவர் இப்பொழுது களிற்றைக்கண்டு, தம் இளமையால் தாம் முன்பு வெருவி யழுகின்ற அழுகையை மறந்த புல்லிய தலையை யுடைய



சிறு பிள்ளைகள். மன்றை வெருவிப் பார்த்து முன்பு அறியாத புதியதோர் வருத்தத்தையுடையர். இது கேட்டாயாயின் விரும்பியதைச் செய்க."

என்ற பாட்டைப் பாடினார். அதைக்கேட்ட அரசன் தான் செய்ய நினைத்திருந்த செய்கைக்கு வெட்கிக் குழந்தைகளைக் கொல்லாது விடுத்தனன். இன்னும் இவரே, சோழன் நலங்கிள்ளி என்பானிட மிருந்து, உறையூர் வந்த இளந்தத்தன் என்பானை ஒற்றன் என்று நினைத்துக், காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி கொல்லப் புகுந்தபொழுது, பாட்டுப்பாடி அவனைக் கொல்லாதிருக்கும்படி செய்தனர். இதுவன்றி இவர், அரசர்க்கு நீதிபோதித்து, அவர்களை ஒருவரோடொருவர் போர்புரியாமலிருக்கும்படி செய்து வந்திருக்கிறாரென்பது, 'இவன் பனைமாலை யணிந்த சேரனல்லன். வேம்புமாலையணிந்த பாண்டிய னல்லன். நின்மாலை ஆத்தியாற் கட்டப்பட்டது. உன்னொடு சண்டையிடுபவனுடைய மாலையும் ஆத்தியாற் கட்டப்பட்டது. உங்களுள் ஒருவன் தோற்றாலும், தோல்வி உங்கள் சோழவம்சத்திற்கே. அன்றி,இருவரும் ஜெயிப்பது உலகவழக்கமின்று. ஆதலால், இப்படிப் போர்செய்வது, உங்களோடொத்த அரசர்களுக்குச் சரியன்று' என்ற கருத்தையுடைய,

'இரும்பனை வெண்டோடு மலைந்தோ னல்லன்
கருஞ்சினை வேம்பின் தெரியலோ னல்லன்
நின்ன கண்ணியு மார்மிடைந் தன்றே, நின்னொடு
பொருவோன் கண்ணியு மார்மிடைந் தன்றே
யொருவீர் தோற்பினுந் தோற்பதுங் குடியே
இருவீர் வேற லியற்கையு மின்றே
குடிப்பொரு ளன்று நுஞ் செய்தி கொடித்தேர்
நும்மோ ரன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி யுவகை செய்யுமிவ் விகலே'

என்ற பாட்டால் அறியலாம்.

பெருந்தலைச்சாத்தனார் என்னும்புலவர், வறுமைமிக குமணன் என்னும் அரசனையடைந்து பாடிப் பரிசு பெறலாமென்ற கருத்துடன்செல்லுங்கால், காட்டிடைக் குமணனைக் கண்டு வேட்டைக்கு வந்திருப்பானோ என நினைத்து, 'அடுப்பில் வெகுநாட்களாக நெருப்பெரியாததால் ஆம்பிபூக்க, நாங்கள் மிகுந்த பசியுடையராயிருக்க, எங்கள் குழந்தை தன்தாயின் தனத்தைச் சுவைக்கச் சுவைக்கப் பால்காணாது தாயினதுமுகத்தைநோக்க, தாய் என்முகநோக்க, யாம் நின்முகம் நோக்கி வந்தனன்' என்றகருத்தையுடைய

"ஆடுநனி மறந்த கோடுயர் அடுப்பில்
ஆம்பி பூப்பத் தேம்பசி யுழவாப்

பாஅ லின்மையிற் றேலொடு திரங்கி
யில்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொ றழூஉந்தன் மகத்துமுக நோக்கி
நீரொடு நிறைந்த வீரிதழ் மழைக்கணென்
மனையோ ளெவ்வ நோக்கி நினை இ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண!
என்னிலை யறிந்தனை யாயி னின்னிலைத்
தொடுத்துங் கொள்ளா தமையலெ னடுக்கிய
பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணார் முழவின் வயிரிய
ரின்மை தீர்க்குங் குடிப்பிறந் தோயே''

என்றபாட்டைப் பாட, அதுகேட்ட குமணன் மிகவருத்தமுற்று, தான் தன் தம்பியால் துரத்தப் பெற்றுக் காடடைந் திருப்பதாகவும், தானரச னாயிருந்த அந்நாள் வந்திலீரே என்றும் கூறி, என்னுடையதம்பி என் தலையைக் கொண்டுவந்தார்க்கு நிறைந்த செல்வம் கொடுப்பதாக விளம்பரப் படுத்தியிருக்கின்றான். ஆதலின், என்னுடைய தலையைக் கொண்டு சென்று அவனுக்குக்காட்டி அவன்கொடுக்கும் செல்வத்தைப் பெற்று உம்முடைய வறுமைநோயை நீக்கிக்கொள்ளும் என்று தன்உடைவாளை உருவிப் புலவர் கையிற் கொடுத்தனனாம். என்னே! பண்டைய அரசர்பண்பு! தன் உயிரையுந் திரணமாக நினைத்துப் புலவர் வறுமைதீர, தலையையுமன்றே கொடுக்கத் துணிந்தான் தண்ணளி சிறந்த தனிப்பெருங் குமணன்.

(தொடரும்.)

——

# பொங்கற் பொன்னாள்.

தமிழாசிரியர் திரு. மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்கள்.

1\. செங்கதிரோன் தேரை வடபாற் செலுத்துநாள்
பொங்கலெனக் கொண்டாடப் போதந்தீர்—மங்கலமாய்ப்
பொற்குடத்தை ஏற்றிப் புதுப்பால் உலையூற்றி
நற்பொங்கல் காண்பீர் நயந்து.

2\. மார்கழிநாள் நீராடி மாசெல்லாம் தானீங்கிச்
சீர்கெழுமோர் தைப்பொங்கல் செய்வீர்நீர்—ஆர்வமொடு
இல்லம் விளக்கி இனியபாற் பொங்கலிட்டுச்
செல்வந் தழைப்பீர் செறிந்து.

3\. காலை அரும்பிக் கடும்பகலில் நேர்நின்று
மாலை மறையும் மணிக்கதிரோன்—வேலைவாய்



பச்சை மயிலின்மேற் பாலனெனத் தோன்றினன்
இச்சையுடன் பொங்க இனிது.

கண்ணா ரமுதாய்க் கலந்த பெருமானே
விண்ணா ரமுதாய் விளங்கினன்—பெண்ணார்
அமுதுடனே காதல் அதுபொங்க இன்ப
அமுதமைப்பீர் ஆற்ற அறிந்து.

பொற்கதிர்போல் நெற்கதிரைப் புள்ளுங் கொறித்துண்ண
இற்பரப்பில் எங்கெங்கும் இட்டுவைம்மின்—அற்புடனே
பொங்கலோ பொங்கலெனப் பூரிப் புடன்கூவி
மங்கலமே கொள்வீர் மகிழ்ந்து.

கரும்பும் இளநீரும் காய்கனியுங் கொண்டு
விரும்பும் பெரும்பொங்கல் வைம்மின்—அரும்பும்
இளநகையோ டென்றும் இனிதிருந்து வாழ்க்கை
வளமும் பெறுவீரே வாய்ந்து.

பக்கத்தே காதலியும் பாலமுதம் போலுரைக்கத்
தொக்குச் சிறுமக்கள் தொட்டீர்க்க—அக்கணமே
பேரின்பங் கொள்வீர் பெரிதுவந்து பொங்கலிட்டுச்
சீரின்பங் கொள்வீர் சிறந்து.

வாழ்நாள் நனிசிறந்து வாட்டம் அடையாமல்
வீழ்நாள் இலையாகி வீற்றிருப்பீர்—ஆழ்கடலில்
செங்கதிரோன் வந்து செறியிருளைப் போக்கினன்
பொங்குகவே பொங்கல் புரிந்து.

புத்தாடை கட்டிப் புதிய பணிபூண்டு
புத்தமுதம் பொங்கப் பொலிந்திடுவீர்—இத்தரையில்
பல்லூழி வாழ்வீர் பயன்துய்ப்பீர் நன்குறுவீர்
நல்லூழ் பெறுவீர் நயந்து.

0\. ஐயம் இடுமின் அறநெறியைக் கைப்பிடிமின்
தெய்வம் ஒருவனெனத் தேறுமின்—வையத்தே
எல்லோரும் ஒன்றென் றிருமின்பாற் பொங்கலிட்டு
நல்லாராய் வாழ்மின் நயந்து.

——

## சிவநேசனுக்கு வாழ்த்தும் மதிப்புரையும்.

(திருவாமாத்தூர் கௌமார மடாலயம் திருவாளர்: தி. மு. செந்திநயகம் பிள்ளையவர்கள்.)

தவநேசத் தோர்மகிழச் சைவநெறி கூறுஞ்
சிவநேசப் பேர்ப்பத் திரிகை—புவநேசர்
போற்றத் தருமற் புதராம சாமியுனக்
கேற்றநல மீவா னிறை. (க)

அருள்வாழ்வு சிறந்ததமிழ் விரகர்மணி வாசகர்நா வரச ரன்னார், இருள்வாரி நிகர்சமணர் சாக்கியரா தியரைவென்ற வியல்பே மானத், தெருள்வாழ்வும் பொருள்வாழ்வுஞ் சேர்ந்தொளிர்நின் சிவநேசன் செயவாழ் வெய்தி, மருள்வாய்ப்பேச் சினரையடப் புரிராம சாமியெனும் வண்பே ரோனே. (உ)

ஆதியினிற் சிவபெருமா னமைத்துளவே தாகமங்க ளறைந்த வாய்மை, நீதிகளைப் பிறழ்த்தியிந்த நிலத்தினரைக் கெடுக்கும்வண்ண நிகழ்த்து மூட, வாதிகளைப் பெருங்காற்றிற் பஞ்செனவே பறந்திடச்செய் வலிமை வாய்ந்து, பூதிசா தனவிளக்கம் புகன்றசிவ நேசவுன்றன் புகழ்ச்சீர் வாழி. (௩)

பொதுவாக விதுகாறுஞ் சைவநெறி தமிழ்த்திறமை புகன்று யிந்நாள், சதுர்வேத நெறிதவிர்த்துச் சாதிவரம் பறுக்கமுயல் சதியோர் மங்க, விதுநேர்தண் ணொளிகொடெழுந் தூரியதொண்டு சிறப்பினிற்செய் வீரந் தோய்ந்தாய், முதுநூல்வே தியர்புலவோர் மகிழ்ந்தசிவ நேசவுன்சீர் முழுதும் வாழி. (௪)

சாரணர்தஞ் சழக்கொழியச் சைவநலம் பெரிதோங்கத் தகவார் காழிச், சீரணவும் பாலரு வாயனவ தரித்துவந்த சீரே போல, ஆரணவா கமம்விதித்த முறைதவிர்க்க முயலுமவ ரகந்தை முற்றுஞ், சீரணமுற் றிடவுதித்த சிவநேச னென்றுநலஞ் செழித்து வாழி. (௫)

முன்னாளிற் பெறும்வரத்தா லிறுமாந்த தகுவர்புர மூன்று நீறப் பொன்னார்செஞ் சடைப்பரம னகைத்தெரித்தா னதுபோலிப் புவனத் தூடே, யிந்நாளிற் கலப்புமணம் சமபந்தி யாலயத்து ளிழிந்தோர் போத, லென்னுணவப்புரமூன் றெரிக்கவந்த சிவநேச னினிது வாழி. (௬)

ஆலவாய்ச் சிவனருளா லம்மணரா யிவர்க்கெளிய னல்லேன் யானேன், றேலவார் குழல்மானி யார்வினவக் கவுணியர்கோ னிசைத்த வாறே, சீலமார் திருக்கோயிற் சீரழிக்க முயல்பவர்தந் திறத்துக் கஞ்சாய், காலகா லன்றுணையாற் சிவநேச செயம்பொருந்திக் களிவாய் வாழி. (௭)

'சிவநேசன்' இப்போது ஐந்தாண்டு நிறைந்தபின் செய்யும் சைவத் தொண்டு மிக்க சிறப்பின தென்ப தொருதலை. பல்லாயிரம் ஆண்டுகளாக ஆன்றோர்களாற் கையாண்டுவரப் பெற்ற சாதி சமய வரம்புகளை உலைக்குமாறு பலர் ஆரவாரித்தெழும் இக்காலத்துக்குச் 'சிவநேசன்' ஒரு வேலாயுதம் போல்வதாகும்.

---



104. ஏவுடைய மைக்க ணெறிபூங் குழையுடைய
ஆவுடைய செந்தே னருகுவர—ஓவிலிசைக்

105. கின்னரர் கிம்புருடர் கேடி னவசித்தர்
பன்னக வேந்தர் பணிகருடர்—முன்னடப்ப

### இசைக் கருவிகள்.

106. எண்ணத் தகுமா யிரங்கரத்தா லோர்வாணன்
வண்ணக் குடமுழவம் வாசிப்பத்—தண்ணுமை

107. மிக்க முருடு விசித்ததுடி பேரிகை
தக்கை தடாரி தகுதாளம்—கொக்கரி

108. தொண்டக மாதியாச் சொல்லிய பல்லியங்கள்
அண்ட முகடதிர வார்ப்பெடுப்பக்—கொண்ட

---

104. ஏ - அம்பு. மைக்கண்ணால் எறியப்படுகின்ற. ஆவுடைய செந்தேன் - ஆவுடைய நாயகி; "நிறைகருணை யாவுடைத் தேன்" 143.

103-4. எழுவரும், இருவரும், மடவாலும், போர்மகளும், ஆவுடைய நாயகியின் அருகே வர.

105. நவசித்தர் - சத்தியநாதர் முதலிய ஒன்பதின்மர். பன்னகவேந்தர் - நாகவரசர். பணிகருடர் - பணிகின்ற கருடர்.

106. வாணன் - முப்புரத் தலைவர்களுள் ஒருவன்; "மூவெயில் செற்ற ஞான்றுய்ந்த மூவரி லிருவர் நின்றிருக் கோயிலின் வாய்தல், காவ லாளரென் றேவிய பின்னை யொருவனீ கரி காடரங்காக, மானை நோக்கியோர் மாநட மகிழ மணிமுழாமுழக் கவ்வருள் செய்த, தேவ தேவநின் றிருவடி யடைந்தேன் செழும்பொழிற் றிருப் புன்கூரு ளானே" (தே. சுந்தர.), "மூன்றுபுரத் தொன்றி லரசுடை வாணன், மேருக் கிளைத்த தோளாயிரத்தொடு, மெழுகடல் கிளர்ந்த திரள்கலி யடங்க, முகம்வே றிசைக்குங் குடமுழா விரட்ட", "அருச்சனை விடாதங் கொருப்படு மூவரில், இருவரைக் காவல் மருவுத லீந்து, மற்றொரு வற்கு வைத்தநட மறிந்து, குடமுழ விசைப்பப் பெறுமரு ணல்கி" (கல். 25: 31-4; 29 : 29-32); வாணாசுரனுமாம்; "போக்கு மாயவன் புணர்ப்பையும் மிருண்மலப் புணர்ப்பையுங் கடந்தெம்மைக், காக்கு நாயக னருச்சனை விடாதருட் கதியடைந்துளவாணன், தூக்கு நேர்பட வாயிரங் கரங்களாற் றொம்மென முகந்தோறும், தாக்க வேறுவே றெழுகுட முழாவொலி தடங்கட லொலிசாய்ப்ப" திருவிளை. திருமணப். 105.

107. முருடு - ஒரு வாத்தியம். துடி - உடுக்கை. கொக்கரி - ஒரு வாத்தியம்; இது கொக்கரை யெனவும் வழங்கும்.

### திருச்சின்னம்.

109. அருவுருவ மாகிநின்று னன்றிருவ ராகி
மருவுருவங் காட்டவந்தான் வந்தான்—உருகித்

110. தொழுதிசைப்ப மாமதுரைத் தொன்னகர்செல் லாது
வழுதி வணங்கவந்தான் வந்தான்—பழுதிற்

111. பொருந்தும் பெரும்பிணிக்கோர் புற்றி னிடத்து
மருந்து தரவந்தான் வந்தான்—திருந்துபுகழ்

112. மையிலகு கந்தரன் வந்தான்வந் தானென்று
செய்ய திருச்சின்னஞ் சேவிப்பத்—துய்ய

113. பணியரவப் பூணன் பவனிதான் செம்பொன்
மணிநெடு வீதி வரலும்—அணிபசும்பொன்

### குழாங்கள்.

114. ஆர்ந்த தருநாட் டரிவையரு நீளுரகர்
சேர்ந்ததிரு நாட்டுத் தெரிவையரும்—கூர்ந்திசையேழ்

115. செங்கை மகரயாழ் சேர்த்திசைக்கும் விஞ்சையர்தம்
மங்கையருங் கந்திருவ மாதரும்—அங்கணியாய்

---

109. அரு உருவம் ஆகிநின்றான் - சதாசிவமூர்த்தியாகிநின்றருளியவர். இருவராகி - சங்கரரும் நாராயணருமாகி. காட்ட - உமாதேவியாருக்கும் சங்கபற்பருக்கும் காட்ட.

110. வழுதி - உக்கிர பாண்டியன்.

111. புற்றினிடத்து மருந்து தர - வீரசேனனென்னும் ஒரு சோழவரசனுடைய பிணிநீங்குதற்குப் புற்றுமண்ணாகிய மருந்தைத் தர.

112-3. கந்தரம் - கழுத்து. துய்ய - தூய; தூய்மை யென்னும் பண்புப்பெயர் முதல்குறுகியும் வரும். பணி அரவம் - படத்தை யுடையதாகிய பாம்பு.

114. தரு நாடு - சுவர்க்கலோகம். உரகர்சேர்ந்த திரு நாடு - நாகலோகம்; அதுவும் இன்பத்திற்குரியஇடம், "நாகநீ ணகரொடு நாகநா டதனொடு போகநீள் புகழ்மன்னும் புகார்நகர்" (சிலப். 1: 21-2.) கூர்ந்து - மிக்கு.

115. மகரயாழ் - மகரவீணை. விஞ்சையர் - வித்தியாதரர். அணியாய் - வரிசையாய்.

114-5. இசை யேழ் இசைக்கும்.



116. நின்று பரவ நெடுநீர்த் துனைதரங்கம்
துன்று பரவைநிலத் தோகையர்கள்—மின்றிகழும்

117. மஞ்சுலவு மேரு வரைமா னதவாவிச்
செஞ்சுடிகை யன்னத் திரளென்ன—அஞ்செழுத்தோன்

118. பாதித் திருவுருவம் பச்சை கலந்துருகப்
பேதித்தோன் சேனைப் பெருக்கென்னப்—போதுற்ற

119. தேனென்ன மாலிமயத் தேவி விழியையின
மானென்று வந்தசில மானென்னத்—தானமுற்றும்

120. காப்பத் திரண்ட களத்திருளைக் காரென்ன
வாய்ப்பத் திரண்ட மயிலென்ன—ஆர்ப்பளிசூழ்

121. அங்கமலத் தானை யளிக்குந் திருவுந்தித்
துங்க விடையானைச் சூழ்தந்து—செங்கைவளை

122. அன்றணிந்த நீரே யணியாது நீக்குவதென்
என்றியம்பா நின்ற வெனவிரங்கக்—குன்றவிற்போற்

123. பொன்பொலியச் செய்தாலப் பொன்வரைபோ லக்குழையீர்
என்பனபோற் கொங்கை யிணைபணைப்ப—அன்பருக்கே

---

116-7. பரவை - கடல். மேருவரை மானத வாவி - மேரு மலையிலுள்ள மானதப் பொய்கை. சுடிகை - உச்சிக் கொண்டை. அன்னத்திரள் - அன்னப்பறவையின் கூட்டம்.

118-9. பேதித்தோன் - மன்மதனுடைய. சேனைப்பெருக்கு - சேனையாகிய மகளிர் கூட்டம். போதுற்றதேன் - திருமகள். இமயத்தேவி - ஆவுடையநாயகியின். தானமுற்றும் - உலக முழுவதையும்.

120. இருளை - விடத்தை. ஆர்ப்பு அளி - ஆரவாரித்தலை யுடைய வண்டுகள்.

121. கமலத்தானை - பிரமதேவனை. திருவுந்தித் துங்க விடையானை - உந்தியையுடைய திருமாலாகிய இடபத்தையுடையவனை; உந்தி - கொப்பூழ்.

122. அன்று - மதுரையில் நீர் வளையல் விற்ற அக்காலத்தில். குன்றவில்போல் - வில்லாகிய மேருமலையைப் போல.

121-2. வளை இரங்க.

123. பொன்வரைபோல் - மேருமலையைக் குழைத்ததுபோல. பணைப்ப - பருப்ப: அன்பருக்கு - தேவர்களுக்கு.

124. ஏற்குமிமை யாமை யெமக்குமளித் தீரெனல்போல்
வேற்குநிக ரான விழிநோக்கப்—பாற்கரன்சூழ்

125. நீலமணி மேடையினு நீணிலா முற்றத்தும்
கோல மரகதச்செய் குன்றத்தும்—சாலவொளிர்

126. ஆணிக் கனகத் தணியா டரங்கத்தும்
மாணிக்கத் தூணிறுத்து மாடத்தும்—சேணுற்ற

127. தென்ற லுலவு சிறுசா ளரத்துமம்பொற்
குன்ற மனையநெடுங் கோபுரத்தும்—நின்றுதனி

128. ஆதிப் பொருளை யடிவணங்கி வெண்ணிலவார்
பாதிப் பிறையும் படர்சடையும்—சோதித்

129. திருமுகமு மெண்டோளுஞ் செம்பவள மெய்யும்
மருமலர்ப்பூங் கொன்றையணி மார்பும்—இருளெறித்துக்

130. காட்டுந் திருநீல கண்டமுங் கண்ணுதலும்
சூட்டுங் கனகச் சுடர்முடியும்—கோட்டு

131. நிலவு பரப்புதிரு நீற்றொளியுங் காதிற்
குலவு மரவக் குழையும்—உலவுமிரு

குழாங்களின் கூற்று.

132. கண்ணுங் கருத்துங் களிகூர் தரநோக்காப்
பண்ணுங் கனியும் பணிமொழியீர்—கண்ணுதலான்

---

124. பாற்கரன் - சூரியன்.

125. செய்குன்றம் - கட்டுமலை.

126. ஆடரங்கம் - நாடகசாலை.

127. சாளரம் - பல்கணி.

128. பாதிப்பிறையும் படர்சடையும்: "ஆதிநீ யருளென் றமரர்கள் பணிய வலைகடல் கடையவன் றெழுந்த, பாதிவெண் பிறைசடை வைத்தவெம் பரமர் பாம்புர நன்னக ராரே", "பாதி வெண்பிறைப் பாசு ரடிகளே" (தே.); "மதிப், பாதிவிடங் காகடைக்கண் பார்" திருவாரூர் நான்மணி 1.

131. அரவக் குழை - பாம்பாகிய குண்டலம்.



133. வந்துவார் பூண்முலைக்கு மைவிழிக்கும் பொன்னுமுத்தும்
தந்தவா றின்று தருமென்பார்—ஐந்தலரான்

134. தண்டவார் வில்லிற் றளராத நாணொலி
கொண்டவா றென்கொல் குறித்தென்பார்-ஒண்டொடியாள்

135. சேருமிடப் பாகமன்றிச் சென்றுவலப் பாகநின்று
பாருமென நோக்கும் படிசெய்வார்—கூருநோய்

136. ஆற்று மருந்தளிப்பா னாதலாற் காமநோய்
மாற்று மருந்தளிப்பான் வந்தென்பார்—ஏற்றமயல்

137. விண்டுபசுந் தார்வாங்கி மீண்டுவரப் புன்னைவன
வண்டு களையழைத்து வம்மென்பார்—உண்டசுவை

138. அன்னத்தை நஞ்சென் றயராது நாகசுனை
அன்னத்தைத் தூதுக் கழையுமென்பார்—முன்னிட்ட

139. வெற்றி தருஞ்சிலைக்கை வேடன் பகைமுடிக்க
நெற்றிவிழி யைத்தொழுது நில்லுமென்பார்—கற்றைநிலாப்

---

133. வார் பூண் - கச்சை அணிந்த. பொன் - பசலை நிறம்; முத்து - கண்ணீர்த் துளி; "கதிர்முலைகண், மானக் கனகந் தருமலர்க் கண்கண்முத் தம் வளர்க்கும்" (திருச்சிற். 335)இன்றுதந்தவாறு தரும் என்பார். ஐந்து அலரான் - ஐந்து மலர்ப் பாணங்களை யுடைய மன்மதன்.

134. தண்ட வார் வில் - கருப்பந்தண்டாகிய நீண்ட வில். ஒண்டொடியாள் - ஆவுடைய நாயகி.

135. கூரும் நோய் - மிக்க நோயை.

135. இடப்பக்கத்தே சென்று தரிசித்தால் அம்பிகை அறிந்து சினத்தல் கூடுமென்பது கருத்து.

136. மருந்து - புற்று மண்ணாகிய மருந்தை. மாற்று மருந்து: மருந்து - பரிகாரம்; "மருந்தில் கூற்றம்" (புறநா. 3:12), "மற்றிந்நோய் தீரு மருந் தருளா யொண்டொடீ" (கலி. 60 : 18.) மயல் - காமமயக்கத்தை.

137. விண்டு - சொல்லி. வம் - வாரும்; "கதுமெனக் கரைந்து வம்மெனக் கூஉய்" (பொருந. 101) என்பதையும் அதனுரையையும் பார்க்க.

138. அயராது - நாம் வருந்தாதபடி.

139. வேள் தன் பகை.

140. பூத்த மதிவெதுப்பும் போதுசங்க பற்பரென
வாய்த்த வரவை வழுத்துமென்பார்—ஏத்தியெதிர்

141. எங்கட் கரசே யிமையோர் பெருமானே
திங்கட் கொழுந்தணிந்த செங்தேனே—பங்கொருபாற்

142. செக்கச் சிவந்த செழுஞ்சுடரே மாலையொரு
பக்கத் திருத்தும் பழம்பொருளே—நெக்குருகி

143. நேசிக்கு மன்பா னிறைகருணை யாவுடைத்தேன்
பூசிக்கும் புன்னைவனப் பூங்கனியே—வீசும்

144. கலைமதிநின் பாலிருப்பக் காத லுடையேம்
கலைமதிகொண் டேகல் கடனோ—சிலையின்

145. வரைநா ணுமக்கிருப்ப மற்றெமக்கே யென்று
வரைநாண் கவர்தல் வழக்கோ—உரையுமென

---

140. சங்க பற்பரைத் தொழுதால், அவர்கள் சந்திரனை விழுங்கி விடுவார்களென்பது கருத்து.

141. திங்கட் கொழுந்து - பிறையை.

142. செக்கச் சிவந்த - மிகச்சிவந்த; "செக்கச் சிவந்த கழுநீரும்"(கலிங்கத் 54); "செக்கச் சிவந்த செழுஞ்சுடரைப் பேதமறப், பக்கத்தில் வைத்த பரிவினன்" (குறுங்குடி நம்பி உலா, 16-7.) மாலையொரு பக்கத் திருத்தும் பழம் பொருள் - சங்கர நாராயணர். நெக்கு - மனம் நெகிழ்ந்து.

143. ஆவுடைத்தேன் - ஆவுடையநாயகி.

144. கலைமதி - கலைகளையுடைய சந்திரன். கலை மதி கொண்டு - ஆடையையும் அறிவையும் கைக்கொண்டு; கலை - பொது மகளிர்க்குரிய அறுபத்து நான்கு கலைகளுமாம்; "எண்ணெண் கலையோ ரிருபெரு வீதியும்", "எண்ணான் கிரட்டி யிருங்கலை பயின்ற, பண்ணியன் மடந்தையர்" (சிலப். 13: 167; 22: 138-9); "யாழ்முத லாக வறுபத் தொருநான், கேரிள மகளிர்க் கியற்கையென் றெண்ணிக், கலையுற வகுத்த காமக் கேள்வி" (பெருங். 1. 35: 84-6); மணிமேகலை, 2:18-32 ஆம் அடி முதலியவற்றாலும் இது விளங்கும்.

144-5. சிலையின் - வில்லினிடத்தே. வரைநாண் - வரையப்பட்ட நாணமாகிய குணத்தை.



146. ஊறுபட நெஞ்ச முடைவுபட விவ்வாறு
வேறுபடமடவார் வேறொருத்தி—தேறித்

## பேதை.

147. தரியாது பூவையையுந் தாயரையும் விட்டுப்
பிரியா விளம்பருவப் பேதை—தெரியாது

148. சொன்மலையச் சொல்லுமுறை தோன்றா விளங்கிள்ளை
தென்மலைய நீங்காச் சிறுதென்றல்—மென்மதுரக்

149. கண்டு படாத கரும்பு முகையவிழா
வண்டுபடாப் புன்னை வனத்தரும்பு—விண்டு

150. நிலவா மதிப்பிள்ளை நீள்வரையை விட்டுக்
குலவாத வாடைக் கொழுந்து—சுலவி

151. நடியாத பைந்தோகை நாக சுனையிற்
படியாத வோதிமப் பார்ப்பு—முடியாத

152. வானரசு நாடி மகமியற்றி யொருவன்
தான முனிவனிட்ட சாபத்தால்—ஆனமகப்

---

146. மடவார் வேறுபடாநிற்க.

147. பூவை - நாகணவாய்ப்புள்.

148. மலைய - மாறுபட. மலையம் நீங்கா - பொதியின் மலையைவிட்டு நீங்காத.

149. கண்டு, கற்கண்டு. முகைஅவிழா அரும்பு, வண்டுபடா அரும்பு எனக்கூட்டுக. அவிழா - அவிழ்த்தெனப் பொருள்கொண்டு, அவிழ்த்து வண்டுபடா அரும்பெனலுமாம். விண்டு - ஆகாயம்; வெளிப்பட்டு எனலுமாம்.

150. நீள்வரை - மேருமலை; வாடை மேருமலையில் தோன்றுவதென்பர்; "வேகவனல், கொட்டுமிள வாடைக் கொழுந்தையஞ்சிப் பொன் வரையை, விட்டுவெள்ளி வெற்பை விரும்பியதும்" (243 - 4) என்பர் பின்; "விண்டுயிரொ லாநடுங்க வாடைதரு மேருவினும்" (சிவஞான யோகிகள் சரித்திரம், 8.) சுலவி - சுற்றி.

151. தோகை - மயில். ஓதிமம் - அன்னம்.

152. ஒருவன் - நகுடன். தானம் - முதலிடத்தைக் கொண்ட. முனிவன் - அகத்திய முனிவர்.

186923

153. ஈட்டியு மெய்தா வியல்புபோற் கூடியும்
கூட்டி முடியாக் குழலினாள்—வாட்டியுயிர்
154. நீக்கா தலகை நெருக்கா துறவருந்த
நோக்காது நோக்குபொது நோக்கினாள்—சேர்க்குமங்கம்
155. முன்ன முருவாய் முதுமறையோன் முன்வந்த
தென்ன விறந்தாங் கெழுமெயிற்றாள்—மன்னர்
156. இனம்போ லுதவமனத் தெண்ணிப் புதைத்த
தனம்போ லமைந்த தனத்தாள்—மனங்கூம்பப்
157. பூவையுரை கேட்டந்தப் பூவை யுரைபயிற்றிப்
பாவையுரை யென்று பகருவாள்—ஓவியத்தை
158. நானேற்ற பாங்கியென நாடியணி பூட்டவது
தானேற்றுக் கொள்ளாத் தகைமையால்—தேனேற்ற
159. அன்ன தொருபிழைகண் டன்புவையா துன்னெடினி
என்ன விளையாட் டெனமுனிவாள்—மின்னனையார்
160. காட்டுமொரு கஞ்சனையிற் கண்டதன்னை யாரென்று
கேட்டதன்கைப் பாவைதனைக் கேட்டழுவாள்—கூட்டித்
161. தழைத்த கதிரெறிக்குந் தண்டாள வண்டல்
இழைத்துவிளை யாட்டயரு மெல்லை—குழைத்தநறும்
162. புன்னைப் பொதும்பரின்கீழ்ப் புற்றா டினிதமர்ந்த
முன்னைப் பொருளான் முழுமுதலான்—மின்னைப்

N27SN
N33

154. அங்கம் - என்பு.

155. மறையோன் - திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

157. பூவை - நாகணவாய்ப்புள்ளின். பயிற்றி - பாவைக்குக் கற்பித்து; பாவை: விளி. ஓவியத்தை - சித்திரத்தை.

158. அது - அந்தச் சித்திரமானது.

160 - 61. கஞ்சனை - கண்ணாடி. அதன் - அந்தப் பிரதி பிம்பத்தின். தாள வண்டல் இழைத்து - முத்தாகிய மணலாற் பாவைசெய்து; இப்பாவை வண்டலம் பாவையென்று வழங்கும்; "வண்டற்பாவை"(ஐங்குறு.124), "வாலிழை மடமங்கையர், வரிமணற் புனைபாவைக்கு" (புறநா 11 : 2-3), "வன்பாற் றிரண்முத்த வண்டலின் மேல்வரு மேதமஞ்சி" (தஞ்சை. 28.) எல்லை - காலத்தில்.

162. பொதும்பர் - சோலை; மரச்செறி[illegible]னைப் பொருளான் - வன்மீக நாதர்.

உ

# செய்தித் திரட்டு.

---

தாயினுஞ்சிறந்த தயவுடையவள்:—தஞ்சை தெற்குவீதியில் காளியம்மன் கோவிலுக்குவடகிழக்காய் வடசரகத்தில் மேம்பாலத்தம்மாள் என்னும் அலர்மேலம்மாள், சுமார்த்தப்பிராமண வகுப்பினர். இவ் வம்மையார் உணவு சமைத்திட்டு அதன் ஊதியத்தால் சீவனஞ் செய்து வருகின்றார்களாயினும், உணவாக்கும் பக்குவமும் உணவருந்துவோர்க்கு உபசரிக்குந் திறனும் உபசாரச் சொற்களும் மிகப் போற்றத்தக்கதாகும். உள்ளன்போடு உணவருத்தும் இவ் வம்மையாரின் செயலை நேரில் தெரிந்தஎவரும் அன்னையினுந் தயவுடைய அம்மையாரென்றே பாராட்டுவர். அவர்களின் தற்கால வயது 75 ஆகலாம். அவர்களுக்கு உடனின்றுதவும் உறவினர்களும் அவ்வம்மையாரின் கருத்துக் கியைந்த உத்தமர்களே.

ஒற்றைக்கைப்பிள்ளை:—இப் பெயரளவில் துதிக்கைப் பிள்ளையாரோ வென்று ஐயுறவேண்டாம். இவர் தஞ்சை கருந்திட்டைக்குடி பூக்குளத்தெருவில் அகமுடையார் மரபில் குலவொழுக்கந் தவறாது சாந்தசீலராய் அஃகமுங் காசுஞ் சிக்கெனத்தேடிய அருணாசலப் பிள்ளை யவர்களின் முதற்றனையர். இவர்பெயர் வைத்தியலிங்கம் பிள்ளை. இவர் குலக்கொடியை மணந்து குடித்தனம் நடத்தினராயினும் காமாந்தகார மென்னும் கள்ளுண்டு, பரத்தையர்பாற் சிக்கி, நிலைதிரிந்து, துர்விநியோகத்துக்குப்பொருண் முட்டுப்பாட்டால் தந்தையை அடிக்கடி பெரும்பொருள் தரும்படி கேட்டு, அவர் பொருளினருமையையும் அதைவீண் விரயமாக்கப்படா தென்பதையும் போதித்தும்உளங்கொள்ளாது, தந்தையைக் கொன்று தந்தை வசத்திலுள்ளபொருள்களைக்கைக்கொள்ளலா மெனக்கருதி, தந்தையார்கண்டுயிலும் ஓர் நள்ளிரவில்தனது குலக்கொடியையும் உடந்தையாகக் கொண்டு, அவள் ஒரு அம்மிக்கல்லைத் தூக்கிக் கொடுக்க, இவர் பரணிலிருந்து தந்தையாரின் தலைக்கு இலக்காகப் போட்டார். தெய்வாதீனமாய் தந்தையாரின் தலையில் விழாமல் தப்பிவிழுந்தது. வன்கண்மையுடன் அம்மிக்கல்லைத்தூக்கிக் கொடுத்தவள் அதுமுதல் இருகண்களுந் தெரியாத குருடியாகவே இருந்து காலஞ் சென்றாள். பிதுர்த் துரோகியோ அடுத்த நாளே பரத்தையுடன் சென்னைபோய் அங்கொரு குதிரைவண்டியில் உலாவரும்போது வண்டிசாய்ந்து தனது இடக்கையின் முக்காற் பாகத்துக்கு மேல் எலும்பு முறிந்து வைத்தியசாலையில் சிகிச்சைக்காகத் தறிக்கப் பட்டு ஒரு கை யிழந்தவராய், பழிபாவங்களுக் கான்ளாகி ஒற்றைக்கைப் பிள்ளை யென்ற பெயருடன் உலகில் உடல்சுமந்து 60 வயதுக்குமேல் இறுதி யெய்தினர்.

**திருப்பறியலூர் வீரட்டம்:**—தேவாரம்பெற்ற திருத்தல சேவை செய்து வருகிற பூவாளூர் சைவசித்தாந்த சபைக் காரியதரிசி திருவாளர் அ. நமசிவாயம் என்பவர் தெரிவிப்பது: மார்கழி ௨௰உ இத்திருத்தல தெரிசனார்த்தமாக முன்னாளிரவு 11 மணிக்கு அங்குசேர்ந்து தங்கியிருந்து, காலை 6 மணிக்குத் திருக்கோயிலுக்குச் சென்றேன். திருக்காப்பிட்டிருந்தது. 8 மணிவரை திறக்கவில்லை. மார்கழிமாதத் திருப்பள்ளியெழுச்சி பூசையில்லையோ என்று கேட்டதற்கு, அங்குள்ளவர்கள் நித்தியபூசைதான்உண்டு; அதுவும் பகல் 2, 3 மணிக்குமேல் நடக்கும் என்றார்கள். மெய்காவற்காரரைக் கூட்டிவந்து திருக்கதவந் திறந்து ஆன்மார்த்த பூசை முடித்து, திருக்கோயில் பூசையைத் தெரிசிக்கக் காத்திருந்தேன். 2 மணிக்குப் பரிசாரகர் வந்து திருமஞ்சனத்துக்குத் தண்ணீர் கொண்டுவந்துவைத்து, தன்வீட்டுக்குச்சென்றார். தன்னளவில் சரியாய் நடப்பதாகவும், குருக்கள் ஒருபெருங்கிழவர்—தினம் இப்படித்தான் செய்கிறார் என்றும் கூறினார். குருக்களைப் பார்த்ததில் வீட்டிலுமில்லை. 3 மணிவரை காத்திருந்தும், பூசை நடக்கவில்லை. அவ்விடமிருந்தவர்கள் ஒருக்கால் சாயங்கால மானாலும் ஆகும் என்றார்கள். அடியேன் மனம் வருந்தி ஆகாரமே செய்யாமல், 5 மணிக்குத் திருவிளநகர்ச் சிவாலயத்திற்கு வந்தேன். காலத்திற் பூசைகள் சிறப்பாக நடந்தன. தெரிசித்துப் பிறகு உணவருந்தினேன். இத்திருவிளநகர்ச் சிவாலயத்திற்கு 12 வேலி நன்செய்கள் உளவாம். 5 காலபூசைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. திருப்பறியலூர், தருமபுரம் ஆதீனத்தைச் சார்ந்தது. 25 வேலி நன்செய் நிலங்கள் இருந்தும், குருக்களுக்கு மாதாமாதம் சம்பளம் ஒழுங்காய் வரவில்லை என்றும், அதனாலே குருக்களும் ஒழுங்காய் நடத்தவில்லை யென்றும் தெரியவந்தது. இனியாவது, ஆதீனத்தார் கவனஞ் செலுத்திக் காலத்திற் பூசை நடக்கச்செய்து, ஆதீனத்தின் பெருமையைக் காப்பாற்றிக் கொள்ளுதல் நலமாகும்.

**கோலாலம்பூர்:**—ஐக்கிய மலாய்நாடு நாட்டுக்கோட்டைச் செட்டியாரவர்களின் வர்த்தகசங்கத்தினரால் நியமனம்பெற்ற ஒருகமிட்டியார், ஸர். சாமுவேல்வில்ஸன் அவர்களை, 2-12-32 காலை, ஐக்கியசர்க்கார் பிரதம காரியதரிசியின் மாளிகையில் பேட்டிகண்டு, ஓர் மகஜர் வழங்கினர். தற்பொழுதுள்ள ஐக்கியதிட்டத்தை யெடுத்துத் தலைமையதிகாரிகளின் இருப்பிடத்தைச் சிங்கப்பூரில்வைத்து, நான்கு சமஸ்தானங்களையும் தனித்தனியே பிரித்துவிடலாகாது என்பது அதன்கருத்து.

**பரோடாவில் ஹிந்தி:**—பரோடா சமஸ்தானத்தில் 1935 ம் ஆண்டு முதல் ஹிந்தியை அரசாங்க பாஷையாக வழங்கப் போகிறார்களாம். அதற்குமத்தியில் ஹிந்தி பாஷையைக் கற்றுக்கொண்டு பரீட்சைக்கு ஆஜராகுமாறு உத்யோகஸ்தர்களுக் கெல்லாம் அறிக்கை அனுப்பி யிருக்கிறார்களாம். இம்முறையாக மற்றைய நாடுகளிலும் தங்கள் தாய்மொழி வழக்கைத் தழுவ முன்வரின் நன்மையே.



**காரைக்குடி:**—நகர சிவாலயத்திலிருந்து மார்கழி ௭உ கிருஷ்ணபக்ஷ அஷ்டமியில், கணேசஸ்கந்த சண்டேசாதி மூர்த்திகளுடன் ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேஸ்வரர் நகர்வலங் கொண்டருளினர். நகரமக்கள் பூரணகும்பமாதிய வைத்து வரவேற்று திவ்யோபகரணங்கள் நிவேதிப்பித்துக் கர்ப்பூரநீராஞ்சனம்செய்து, வாழ்த்தி வணங்கிப் பிரதக்ஷிணம் செய்து திருவருளின்பம் பெற்றனர்.

**கண்டாச்சிபுரம்:**—பெற்றோர் சங்கத்தின் மாதாந்தக்கூட்டம் 15, 27-11-1932ல், பிரபல மிராசுதார் திரு. வை. ச. இராமலிங்க முதலியார் தலைமையில் இனிது நடைபெற்றது.

**தேர்தல்:**—தென்னாற்காடுஜில்லா திருக்கோவலூர் தாலுகாபோர்டுக்கு, கண்டாச்சிபுரம் திருவாளர் வை. ச. இராமலிங்கமுதலியார் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார்.

**ஆவினிப்பட்டி:**—விவேகாநந்தர் கல்விக்கழக மாணவர்கள் 25-12-32 காலை கொ. இலக்குமிபுரம் சொக்கலிங்க வித்தியாசாலைத் தலைமையாசிரியர் திரு. அ. இராமாநுஜாச்சாரியரால் பரீக்ஷை செய்யப்பெற்றனர். கணிதம், வாசித்தல், சமயபாடம், பொதுஅறிவுப்பாடங்களில், எழுத்திலும்வாய்க்கேள்விகளிலும் தக்கவிடை பகர்ந்தனர். பரீக்ஷகர் மாணவர்களையும், ஆசியர் திரு. வ. மு. இரத்நேசுவரையரவர்களையும் நகரத்தார்களையும் கழகஅமைச்சர் திரு அ. பழ. பழநியப்பசெட்டியாரவர்களையும் பாராட்டி அபிப்பிராயம் தந்தனர்.

ஆறாம்ஆண்டு எழாம் மாதக்கூட்டம் திரு. அ. இராமாநுஜாச்சாரியர் தலைமையில் 25—12—32 மாலை 3 மணிக்கு நடைபெற்றது. சங்கராச்சாரிய சுவாமிகள், அமர்நீதி நாயனார், கண்ணப்ப நாயனார், தீர்க்காலோசனை, பெரியாரைப்பேணல், கண்ணகிகற்பு, பிறனில் இகழாமை, கம்பர் கழறியசெம்பொருள், சகவாசப்பயன் என்னும் பொருள்பற்றி மாணவர் பேசினர். திரு. வ. மு. இரத்திநேசுவரையர் பெரியாரியலும் சமயநிலையும் பற்றி விளங்கக் கூறி வந்தனமளித்தார்.

**சென்னை:**—அகிலஇந்திய சாதுசங்க மகாசபையின் 31-வது ஆண்டு விழா, 1932௵ டிசம்பர்௴ 25உ முதல் 29உ வரை, வில்லிங்டன் வாசகசாலைக்கட்டிடத்தில், பலசாதுக்கள் ஆத்மஞானத்துக்குரிய விஷயங்களைப் போதித்தருள இனிது நிறைவேறியது. உயர்திரு கருணாநந்த சுவாமிகள் தமக்கு 74 ஆண்டுகள் ஆகியும், அன்னதானம்-வித்தியாதானம்-ஞானதானம் முதலானவைகளைத் தளராது ஆற்றிவருகின்றனர்.

கும்பகோணம்:—நகரப் பிரமுகர்களும் கனவான்களும் வித்துவான்களும், 18—3—1932ல் சென்னை அட்வோகேட்டும் ரிட்டயர்டு ஹைக்கோர்ட்டு ஜட்ஜுமான ஸ்ரீமான் V. V. ஸ்ரீநிவாச அய்யங்கார் தலைமையில் போர்ட்டர் டவுன் ஹாலில் கூடித் தீர்மானித்தவாறே, கடந்த இருபத்தைந்து வருஷங்களாகத் தெய்வத் திருவருளால் மெய்வருத்தம் பாராது, பசிநோக்காது கண் துஞ்சாது எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளாது ரூ 135000 செலவு செய்து லக்ஷம் சுலோகங்களாகிய மஹாபாரதத்தை மணலூர் ஸ்ரீ உ. வே. இராமாநுஜாச்சாரியார் தமிழில் மொழிபெயர்த்து ஒன்பதினாயிரம் பக்கங்களுக்கு மேல் புத்தகங்களாக வெளியிட்டிருப்பதற்கு நன்றிபாராட்டி, ஷை கைங்கர்யத்தில் அவர்களுக்குக் கைப்பொறுப்பான ரூ 15000த்தை ஈடுசெய்ய ஸ்ரீமஹாபாரத நன்கொடைச் சங்கத்தார், அன்பர்களின் உதவியை நாடி வேண்டுகோட் பத்திரம் வெளியிட்டுள்ளார்கள்.

திருநாவலூர்:—சைவசமய பரமாசாரிய சுவாமிகளுள் ஒருவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவவதாரஞ் செய்ததும், தேவாரத்திருப்பதிகம் பெற்றதுமாகிய இத்திருத்தல சிவாலயத்தில், சுந்தரமூர்த்தி சுவாமிகள் மூலஸ்தானத்திற்கு, இம்மதி ௰௮௳ திங்கட்கிழமைமுற்பகல் மருந்துசாத்தி அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் பேரன்பரின் பொருளுதவியாற் செய்யப்பெறுகிறது. இத் திருத்தலம் திருநாமநல்லூர் என்று வழங்குகிறது. இத்தலத்திற்குப் பண்ணுருட்டி புகைவண்டி நிலயத்திலிருந்தும், உளுந்தூர்ப்பேட்டை புகைவண்டி நிலயத்திலிருந்தும் இயந்திர ஊர்தி(மோட்டார்) வசதியுண்டு.

சைவசித்தாந்த மகாசமாஜம்:—௨௭-வது ஆண்டுவிழாவும், சைவர் மகாநாடும், கூவம் எனவழங்கும் திருவிற்கோலத்தில், ஆங்குள்ள சைவசித்தாந்த சபை யாதரவுடன், திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தலைவரும், மாஜி தாசில்தாரும், உமாபதிசிவம் திருமுறைத்திரட்டின் உரையாசிரியருமாகிய சைவத்திருவாளர் மா. வே. நெல்லையப்பப் பிள்ளை B. A. அவர்களின் தலைமையில், புலவர் பெருமக்களின் விரிவுரைகளுடன் மார்கழி ௧௬௳ முதல் மூன்றுதினங்களிற் சிறப்பாக நடைபெற்றன.

உபசாரம்:—சிவகங்கை தாலுகா போர்டுத் தலைவரும், பரோபகார ஔதாரிய குணசீலருமான அலவாக்கோட்டை திருவாளர். பி. நா. சொக்கலிங்கஞ்செட்டியாரவர்கட்கு மதகுபட்டிக்கு அணிமையில் மின்சாரவிளக்குநிலையத்தில் இராமநாதபுரம் ஜில்லா நீதிபதி மகா-ள-ள-ஸ்ரீ R. S. சங்கரய்யர். B. A. B. L. அவர்கள் தலைமையில் தெற்குவட்டகைத்தனவணிக நகரத்தார் மார்கழி ௨௫௳ மாலையில் ஒருஉபசாரப்பத்திரம் வழங்கி விருந்து நடாத்திமகிழ்வூட்டினர்.

# செய்தித் திரட்டு.

தமிழ்நாட்டு ஆகமசபை:—இது, புரட்டாசி ௨௰௩௳ மதுரையில் ஸ்தாபிக்கப்பெற்றது. இதற்கு மறைத் திருவாளர்களான N. நடேசஐயர் அட்வகேட் தலைவராகவும், R. கணபதிஐயர் அட்வகேட்—K. சோமசுந்தர சாஸ்திரியார் வக்கீல் இருவரும் காரியதரிசிகளாகவும், K. இராமையங்கார் அட்வகேட் முதலான எண்மர் நிர்வாக அங்கத்தினர்களாகவும், மறைத்திருவாளர் தேதியூர் சுப்பிரமணியசாஸ்திரியார் முதலான ஐவர் ஆகமபண்டித வித்வக் கோஷ்டியினராகவும் சேர்ந்துள்ளார்கள். ஆலயப்பிரவேச சம்பந்தமான மசோதாக்களைத் தடுக்க அதிவிரைவில் ஒரு மகாநாடு கூட்டப்பெறும். இச்சபையிலிருந்து பல அறிக்கைகள் வெளியிடப்பெறுகின்றன; வைதிக மக்களுக்கு அமுதாகவும், காந்திபக்கத்துக்குக் கடுவாகவும் இருப்பதுடன், காந்திபக்கத்தறிக்கைகளின் கூற்றுகளை ஆடிக்காற்றிற் பறக்கடிக்குந் தகையனவாம்.

சிதம்பரம்:—மார்கழித் திருவாதிரைத் தெரிசன மகோற்சவம் சிறப்பாக நிறைவேறியது. ஏழாந்திருநாள்முதல் மூன்று நாள்வரை, ஸ்ரீஞான சம்பந்த சபை, அரியபெரிய வித்துவான்களின் விரிவுரைகள், தேவாராதி பாராயணங்களுடன் நன்கு நடைபெற்றது.

காந்தி:—திருக்கோயில் இழிவுபுரியும் அறிக்கை யெழுதிய வலக்கை வலியிழந்ததாம். என்னே! இறைவனின் மறக்கருணை. காந்தியால் நன்மைகள் ஏதேனும் இதுவரைஉண்டா? இனியாவது உண்டாமா? என்று நன்றாகச் சிந்தித்துத் தெளிந்து அவரைப் போற்றுவோர் போற்றுக!

பரிமணங்குடி:—ஸ்ரீ சண்முகநாதசுவாமி கோவிலில், மார்கழி ௨௬௳ கார்த்திகை நாள் அபிஷேக ஆராதனமும் ஸ்ரீ பரமகுரு சுவாமிகள் குருபூஜையும், சைவசன்மார்க்க சங்கமுதலியனவும் நடைபெற்றன.

மெய்வழி ஆச்சிரமம்:—மானமதுரையையடுத்த இராஜகம்பீரத்தில் மச்சநாதர் பரம்பரை மகரிஷி மார்க்கநாதர் ஆச்சிரமமாகும். இதிற் சீடராவார் சநதிமத பேதங்களின்றி மெய்ஞ்ஞானுனுபவத்தை இல்லறதுறவறமாகிய எதிலிருந்தும் இப்பிறப்பிலே யெய்தலாம். சாமி விருதை சிவஞான யோகிகள் அகவற்பா சாத்திப் போற்றிச் சரணடைந்தனர். மதுரை R. S. பதி அவர்கள், மகமதியப் புலவர் ஒருவர், அமுததாரணயோகம் பயிலும் மானமதுரை மதுரைவீரர், கலியாணசுந்தரர் ஆகியவர்கள் சரணடைந்து ஞானோபதேசம், ஞானகாஷாயம் முதலியன பெற்றனர்.

பலவகுப்பினர், பலமதத்தினர் சீடராகி, அவிரோதஞானம் அடைகின்றனர். குருமூர்த்திகளின் பெருமையை நேரிற்கண்டாலன்றி, இத்தகைத்தெனச் சொல்லவியலாது. இம்மகான் பதினெண் சித்தர்களிலொருவராகிய மச்சமுனி பரம்பரைத் தனிகைவள்ளல் சீடர் எனத் தெரிகின்றது என, பரமானந்தம் எழுதுகிறார்.

மோட்சதீபம்—தேவகோட்டை ஜமீந்தார் உயர்திரு அருணசலசுவாமிகளுக்கு இம்மதி ௬௳ காளையார்கோவிலில் நடைபெறும் மோட்சதீபம் காண, கா. செ. மடாலயத்து உயர்திரு அருணசல சுவாமிகள் பத்திரிகை வழங்கி யழைக்கின்றார்கள்.

# சிவநேசன்.

இப் பத்திரிகை ஒவ்வொரு தமிழ்மாத முதற்றிங்கட்கிழமைதோறும் மேன்மைமிக்க புலவர் பெருமக்களாலும் உண்மைப் பெரியோர்களாலும் வரையப்பெறும் சமயஉண்மை தமிழின் இனிமை சாதியவொழுக்கங்களின் நன்மையாதிய கட்டுரை பலவும் உலக நிகழ்ச்சிகளும் தன்னுட்கொண்டு வரும்.

## ஆண்டுத்தொகை விவரம்.

உள்நாட்டிற்கு ரூ 2 4 0 அதற்கு மூலதனம் ரூ 30 0 0
அயல்நாட்டிற்கு ரூ 3 0 0 அதற்கு மூலதனம் ரூ 40 0 0
தனிப்பிரதி அணா 0 3 0

## விளம்பர விகிதம்.

வியாபார விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 4 0 0
நீதிமன்ற விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 8 0 0

## நிருப நேயர்கட்கு அறிவிப்பு.

க. நமது சிவநேசனுக்கு நிருபம் வரைவோர் நமது பத்திரிகைநேயராயிருத்தல்வேண்டும். உ. வரையும் விஷயங்கள், சமயநிந்தனை சாத்திர நிந்தனை, தெய்வநிந்தனை, ராஜநிந்தனை ஆதிய நிந்தனைகளில்லாமலும், எவரையுங் குறிப்பிட்டுத் தாக்காமலும், பொதுவாகவும் நன்மை பயப்பனவாகவு மிருத்தல் வேண்டும். ந. பிழையின்றி நல்ல மையினால் நல்ல காகிதத்தில் ஒரே பக்கத்தில் சுருக்கமாகவும் விளக்கமாகவும் தெளிவாகவும் எழுதல்வேண்டும். ச. வருங் கடிதங்கள் கட்டுரைகளைப் பொருத்தமாகத் திருத்திப் பிரசுரிக்கவும், பொருத்தமில்லாதவைகளைப் பிரசுரியாதுவிடவும் கூடும். ரு. பிரசுரிக்கப்படாத கடிதங்கள் கட்டுரைகள் திருப்பி யனுப்பப் படமாட்டா. சு. கடிதக்காரர்களின் அபிப்பிராயங்கட்குக் கடிதக்காரர்களே பொறுப்பாளிகளாவர்.

## சிவநேசன் அச்சுக்கூடம்.

இவ் அச்சுக்கூடத்தில் நன்முகூர்த்தப் பத்திரிகை முதலிய எல்லா வித அச்சு வேலைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் நயமாக அவரவர்மனதிற்குகந்த வண்ணம் குறித்த காலத்தில் அச்சியற்றித் தருகின்றோம். அவைகட்குக் காகிதங்கள் அனைத்தும் எங்களிடத்து உள்ளன.

அமைச்சர்.

பலவான்குடி 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில் பத்திராதிபர்
ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.